பக்கங்கள்:30 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 18 ஞாயிற்றுக்கிழமை 02.01.2022 கதிர் 58

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ். மாநகரசபை உறுப்பினர்களின் ஏகமனதான சபைத் தீர்மானத்துக்கு மாறாக, எதேச்சதிகாரமாகச் செயற்பட முயன்ற யாழ். மேயர் மணிவண்ணனுக்கு கனகச்சிதமாக 'செக்' வைத்திருக்கின்றார் வடக்கு ஆளுநர் ஜீவன் பக்கம்02

# புதுவருட அனர்த்தங்களில் வடக்கில் ஐவர் உயிரிழப்பு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 02

புதுவருட தினத்தில் வடக்கில் இடம்பெற்ற சம்பவங்களில் ஐவர் உயிரிழந்தனர். அதேநேரம் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

புதுக்குடியிருப்பு வற்றாப்பளை வீதியில் கேப்பாபுலவுப் பகுதியில் டிப்பர் – மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்தனர்; மேலும் ஒருவர் படுகாயமடைந்தார். 2

## புதிய கொரோனா திரிவு இஸ்ரேலில் கண்டுபிடிப்பு

இஸ்ரேலில் புதிய கொரோனாத் திரிவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் மற்றும் சாதாரண காய்ச்சலுக்கான (ப்ளூ) நோய் அறிகுறிகள் காணப்படுகிறது, இதற்கு 'ஃப்ளுரோனா' என பெயரிடப்பட்டுள்ளது.

மத்திய இஸ்ரேலைச் சேர்ந்த பெண் ஒருவருக்கே இந்த புதிய வகை கொவிட் திரிவு உறுதியாகியுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண், கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர் எனவும், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் 2

## காருடன் மோதி எரிந்தது உத்தரதேவி



காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி நேற்று மதியம் 12.30 மணிக்கு பயணித்த உத்தரதேவி கடுகதி ரயிலுடன் கார் மோதி விபத்துக்குள்ளானதில் கார் சாரதி உயிரிழந்துள்ளார்.

வனவாசலப் 2

## டிப்பர் - மோ.சைக்கிள் விபத்தில் கேப்பாபுலவில் இருவர் மரணம்!



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கேப்பாபுலவு பகுதியில், கேப்பாபுலவு – புதுக்குடியிருப்பு வீதியில் நேற்று மாலை 5.30 மணியவில் இடம்பெற்ற டிப்பர் – மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் ஆபத்தான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வற்றாப்பளை பகுதியில் இருந்து கேப்பாபுலவு பகுதி நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் 2

## இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.02

இரணைமடு குளத்தின் வான் கதவுகள் இன்று திறக்கப்படவுள்ளமையால் மாவட்டச் செயலகத்தினால் குளத்தின் கீழ்ப்பகுதிக்கான வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.


வவுனியா மற்றும் கனகராயன் குளத்தில் 2

## கசூரினா கடலில் மாணவன் பலி!



காரைநகர் கசூரினா கடலில் நேற்றுக் குளித்த 2

## தாண்டிக்குளத்தில் பிக்கப் - ஓட்டோ நேருக்கு நேர் மோதல்; இளைஞன் பலி



(கி.வசந்தரூபன்)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் நேற்றிரவு 7.40 மணியளவில் பிக்கப் – ஓட்டோ நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தரான இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ஊடக நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான பிக்கப்பும், நொச்சி மோட்டைப் பகுதியில் இருந்து வவுனியா நகரை நோக்கி வந்த ஓட்டோவும் தாண்டிக்குளம் பகுதியில் நேருக்கு நேர் மோதி 2










## நீர்வீழ்ச்சியில் இருவர் சாவு

தெனியாய - சத்மல எல்ல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்று காணாமல் போன இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தியாகராஜா.

கடந்த நவம்பர் 30ஆம் திகதி மாநகர சபையின் கூட்டம் நடைபெற்றது. யாழ் நகரத்தில் மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு எடுத்து வர்த்தகம் செய்யும் வர்த்தகர்களுக்கு அந்தக் கடைகளை உரிமை மாற்றம் செய்யும் விடயம் நிலுவையில் இருந்தமையால் அது குறித்து அந்தக் கூட்டத்தில் பேசப்படவிருந்தது.

இருபது வருட வாடகையைச் சேர்த்துச் செலுத்தினால் அந்தக் கடையை சம்பந்தப்பட்ட வர்த்தகருக்குகே உரிமை மாற்றம் செய்வதற்கு மாநகர சபை இணங்கியிருந்தது.

அந்தக் கணக்கீட்டை பழைய (முன்னைய) வாடகைக் கட்டணத்தின் அடிப்படையில் மேற்கொள்ளும்படியும், கொடுப்பனவை மூன்று வருட கால அவகாசத்தில் பிரித்துப் பிரித்துச் செலுத்துவதற்கு அனுமதிக்கும்படியும் சம்பந்தப்படத்தப்பட்ட 18 வர்த்தகர்கள் மாநகர சபையிடம் விண்ணப்பித்திருந்தனர். அதன் பிரதி ஆளுநருக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

நவம்பர்30ஆம் திகதி கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தலைமை வகித்த மேயர் மணிவண்ணன், பொறுப்பை உதவி மேயரிடம் கையளித்து விட்டுத் திடீரென சபையிலிருந்து புறப்பட்டார். சபை உறுப்பினர் ஒருவர் அவரைப் பின்தொடர்ந்து அவரது அலுவலக அறை வரைச் சென்று மேயரைப் பார்த்தார். அச்சமயம் யாழ். மாநகர ஆணையாளரும் உடனிருந்தார். மேற்படி வர்த்தகர்களின் கடைகள் பற்றிய விடயம் ஆராயப்பட வேண்டிருப்பதால் வந்து தலைமை வகித்து அந்த விடயத்தை முடித்து விட்டுச் செல்லுங்கள் என்று உறுப்பினர் கோரினார்.

"பிரச்சினை இல்லை. நீங்கள் ஆலோசித்து ஒரு முடிவு எடுங்கள். எனக்கு வேறு நிகழ்வு இருக்கிறது" என்று கூறிவிட்டு மேயர் புறப்பட்டு விட்டார்.

உதவி மேயர் தலைமையில் கூடிய சபை, கடைகள் உரிமை மாற்ற விடயத்தை விரிவாக ஆராய்ந்து ஏகமனதான முடிவுக்கு வந்தது.

முன்னைய – பழைய வாடகை வீதத்தில் கணக்கீடு என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. முதலில் இருபது வீதத் தொகையை மார்ச் மாதத்துக்குள் செலுத்தி, எஞ்சியதை அடுத்த இரண்டு வருட காலத்தில் மூன்று, மூன்று மாதங்களாகப் பிரித்து செலுத்துவதற்கு அனுமதிப்பது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் பற்றி அறிந்த சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் அது குறித்து ஆளுநருக்கும் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில் சபையின் அடுத்த கூட்டம் கடந்த 28 ஆம் திகதி மேயர் தலைமையில் நடைபெற்றது. தனது பிரசன்னம் இல்லாத நேரத்தில் சபையில் ஏகமனதாக எடுத்த மேற்படி தீர்மானத்தை ஏற்க முடியாது என எதேச்சதிகாரமாக அறிவித்த மேயர் மணிவண்ணன், அந்தத் தீர்மானத்தைச் சென்ற கூட்ட அறிக்கையாகப் பதியவும் மறுத்து விட்டார். இதனை ஆட்சேபித்து மாநகர சபையின் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வெளிநடப்பு, சபை முன்றிலில் ஆர்ப்பாட்டம் என எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மேற்படி கடை உரிமை மாற்றத்தினால் சபைக்கு வரக் கூடிய நிதி வருமானம், இந்தத் தீர்மானத்தால் தமது தற்போதைய நிர்வாக காலத்தில் – தான் முடிவெடுத்துச் செலவிடுவதற்கு – வராது என்ற காய்ச்சலினால்தான் இப்படி அதை மேயர் எதிர்க்கிறார் என்று கூறப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் யாழ் மாநகர சபை கவுன்ஸில் கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும்படி பணிக்கப்படுகின்றீர்கள் என்ற உத்தரவை வழங்கியுள்ள ஆளுநர் மேற்படி 30ஆம் திகதி கூட்ட அறிக்கையைய் தமக்கு சமர்ப்பிக்கும் படியும் பணித்துள்ளார்.

மணியின் எதேச்சதிகாரத்துக்கு நல்ல 'செக் மேட்' தான்!

(யாழ்.மேயர் மணிவண்ணனின் விளக்கம் 30ஆம் பக்கத்தில் செய்தியாக)

✦ ✦ ✦

'நடக்கும் என்பார் நடக்காது; நடக்காது என்பார் நடந்து விடும்' – என்று ஒரு சினிமாப் பாட்டு உண்டு. சில சமயங்களில் நிஜத்தில் அப்படியாகிவிடுவதும் உண்டு.

தமிழர் தரப்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு பொது நிலைப்பாட்டு ஆவணம் தயாரிக்கும் ஏற்பாடு பெரும்பாலும் சித்திப்பது துர்பலம் என்றே குறிப்பிட்டு வந்தேன். ஆனால் 'நடக்காது என்பார் நடந்து விடும்' என்பது போலாகியிருக்கின்றது விடயம்.

நேற்றுக் கொழும்பில் சுமந்திரன் வீட்டில் நடந்த கூட்டம் சுமுகமாகவும், ஆரோக்கியமாகவும், பல தரப்பு இணக்கத்துக்கும் இடமளிக்கும் விதத்திலும் நகர்ந்திருப்பதாக உள்வீட்டுத் தகவல் ஒன்று தெரிவித்தது.

நேற்றுத் தயாரிக்கப்பட்டது நகல் ஆவணம்தான். எல்லாத் தலைவர்களின் இணக்கமும் அதற்குக் கிட்டினால்தான் அது சித்திக்கும். ஆயினும், எல்லாத் தரப்பினரினதும், எதிர்பார்ப்புக்களுக்கும் இடமளிக்கும் வகையிலான ஒரு கூட்டுச் 'சாம்பாராக' அது தயாரிக்கப்பட்டிருப்பதால் இம்முறை அது 'பாஸ்' ஆகிவிடும் என்பது போலத்தான் தோன்றுகின்றது.

ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம் உண்டு. தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவுக்கு சுமந்திரனும், சம்பந்தனும் சில வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர் என நான் அறிந்திருந்தேன்.

தமிழரசுத் தலைவர்கள் மாவையும் சம்பந்தனும் கையொபபமிடும் ஆவணத்தில் –

✦ சமஷ்டி வலியுறுத்தப்பட்டிருக்க வேண்டும்.

✦ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை வற்புறுத்தப்பட்டிருக்க வேண்டும்.

✦ இலங்கை – இந்திய ஒப்பந்த இணக்கப்பாடுகளின் நடைமுறையாக்கம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

– என தமிழரசு அரசியல் குழு நிபந்தனை விதித்திருந்தது.

அவற்றை, நேற்றுத் தாமும் சேர்ந்து தயாரித்த நகல் ஆவணத்தில் சுமந்திரன் உறுதிபடச் சேர்ந்திருக்கின்றாரா என்ற சந்தேகம் நிலவுகின்றது. அப்படி இல்லாவிட்டால் விரைவில் கூடவிருக்கும் தமிழரசு மத்திய குழுக் கூட்டத்தில் சுமந்திரனுக்கும் சரமாரியான மங்களம் விழும் என எதிர்பார்க்கலாம்.

புதிய ஆவண நகல் தயார். பொது இணக்கப்பாடு இனித்தான் வரவேண்டும்.

ஆனால், இந்த ஆவணம், தமிழ்ப் பேசும் தரப்புக்களின் பொது நிலைப்பாட்டு வெளிப்பாடாக முன்வைக்கப்படும் ஓர் அறிவித்தலா அல்லது இந்தியப் பிரதமர் மோடிக்கு முறையிடப்படும் கடிதமா என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

பொது நிலைப்பாட்டு ஆவணமாக – அறிவித்தலாக – அதைத் தயாரித்து ஒப்பமிட்டு விட்டு, வேறு இணைப்புக் கடிதத்துடன் அந்த ஆவணத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்பலாம் என்ற ஒரு கருத்தும் கட்சித் தலைவர்களிடையே நிலவுவதாகத் தெரிகின்றது.

இப்படி ஒரு கடிதத்தை இந்தியத் தரப்புக்கு ஒன்றுபட்டு வழங்குங்கள் என்ற கோரிக்கை இந்தியப் பக்கத்தில் இருந்து வந்தது என்ற பேச்சு முற்றிலும் தவறு என சம்பந்தப்பட்ட – அதிகாரபூர்வ – தரப்புகள் மீண்டும் உறுதியாகத் தெரிவித்தன. அதனைத் திரும்பவும் சுட்ட விரும்புகிறேன்.

இலங்கை விடயத்தை இந்தியத் தரப்பில் பல பிரிவுகள் கையாளுகின்றன என்பது வாஸ்தவம்தான். ஆனால் அதனை வைத்து – இந்தியாவைச் சாட்டி – நம் உள்ளூர் தரப்புகள், இடையில் விளையாடி, குட்டையைக் குழப்பி, மீன் பிடிக்க முயல்வது குறித்து எல்லோரும் – அரசியல் தலைவர்கள் அனைவரும் – முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது.

தமிழர் தரப்புகள் ஒன்று சேர்ந்து இந்தியப் பிரதமருக்குத் தமது பொது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும் என்றபெயரில் இந்த முயற்சிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டன.

"இந்த முயற்சிகளின் – ஆரம்பத்தின் – பின்னணி யார் அல்லது எது என்பது எனக்குத் தெரியாது. இது, ஏன் இப்போது முன்னெடுக்கப்படுகின்றது என்பதும் எனக்கும் தெரியாது." – என்று நேற்று முன்தினம் தமது வீட்டில் நடந்த தமிழ்க் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சம்பந்தன் கிளப்பிய சந்தேகம் சிறிய விடயம் அல்ல. அதற்குள் நுட்பமாக – நுணுக்கமாக – பல அர்த்தங்கள் புதைந்து கிடக்கின்றன என்று நம்புகிறேன். கட்சித் தலைவர்கள் உஷாராக இருப்பது நல்லது.

– மின்னல் –

---

## டிப்பர் - மோ.சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயணித்த மூவரே இந்த விபத்தில் சிக்கினர். எதிர்த்திசையில் வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்து இடம் பெற்றுள்ளது.

டிப்பர் சாரதி முள்ளியவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிலக்குடியிருப்பு கேப்பாபுலவைச் சேர்ந்தவர்களான கிருஷ்ணசாமி மாரிமுத்து(வயது 48), சூரியகுமார் கரிதாஸ் (வயது 17) ஆகியோரே சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சண்முகம் நிறோஜன் (வயது 22) என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் கிராம மக்களுக்கும் இடையில் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.

டிப்பரை அந்த இடத்தை விட்டு எடுத்து செல்லமுடியாதவாறு மக்கள் ஒன்று கூடியதால் பதற்ற நிலை ஏற்பட்டது. பொலிஸாருக்கும் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கும் இடையில் குழப்பம் நீடித்தது.

சம்பவ இடத்திற்கு மேலதிக பொலிசார் வரவழைக்கப்பட்டமையை அடுத்து நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

---

## தாண்டிக்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விபத்துக்குள்ளாகின். விபத்தையடுத்து ஓட்டோ தடம்புரண்டு முழுமையாக சேதமடைந்தது. பிக்கப் கட்டுப்பாட்டையிழந்து அருகில் இருந்த மரத்துடனும் மோதியுள்ளது.

விபத்தில் ஓட்டோச் சாரதியான வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 32 வயதான ரஜீபன் என்பவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். சம்பவ இடத்திற்கு வருகை தந்த போக்குவரத்து பொலிஸார் விபத்துத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டபோது அப் பகுதிக்கு வந்த இளைஞர்களுக்கும், பிக்கப் சாரதி மற்றும் அதில் பயணித்தவருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு குழப்ப நிலை உருவானது.

இதனையடுத்து, வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.பீ.மானவடு தலைமையில் மேலதிக பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமையைக் கட்டுப்படுத்தினர். பிக்கப் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அதில் பயணித்தவரும் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

---

## புதுவருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேநேரம் வவுனியா மாவட்டம் ஏ-9 வீதியில் தாண்டிக்குளம் பகுதியில் பிக்கப் வாகனமும் ஓட்டோவும் மோதி ஏறபட்ட விபத்தில் ஓட்டோச் சாரதி (32 வயது) உயிரிழந்தார்.

இதேநேரம் கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் சந்திப் பகுதியில் இடம்பெற்ற வன்முறையில் முல்லை வீதி, பரந்தன் என்னும் முகவரியைச் சேர்ந்த குணரட்னம் கார்த்தீபன் (வயது 28) என்ற இளைஞர் உடைந்த போத்தலினால் குத்தியதன் காரணமாக உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவரது உடல் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதே நேரம் மேலும் ஒருவர் கழுத்தில் வெட்டுக் காயத்துடன் அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேசமயம் காரைநகர் கசூரினா கடற்கரையில் குளித்த இளைஞர் ஒருவர் கடல் அலையினால் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

# மீண்டும் எகிறியது சிமெந்தின் விலை

சீமெந்துப் பொதியின் விலையை நேற்று முதல் அதிகரிக்க உள்நாட்டு சிமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

50 கிலோ சிமெந்துப் பொதியின் விலையை 100 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சிமெந்துப் பொதி ஒன்றின் புதிய விலை 1,375 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும். தற்போது இறக்குமதி செய்யப்படும் சிமெந்துப் பொதியின் விலையானது, உள்ளூர் சீமெந்துப் பொதியின் விலையை விடவும் 100 ரூபா அதிகமாகும்.

அதன்படி இறக்குமதி செய்யப்படும் சீமெந்துப் பொதியின் விலை 1,475 ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## நீர்வீழ்ச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்ந்த தந்தை (வயது48) மற்றும் மகன் (16) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

---

## புதிய கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரிசோதனையில், சாதாரண காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளுடன், கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவருக்கு பாரிய அளவில் உடல்நிலை பாதிக்கப்படவில்லை என்பதுடன், விரைவில் அவர் குணமடைந்து வீடு திரும்புவார் என மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் இஸ்ரேலின் சுகாதாரத்துறை ஆய்வுகளை முன்னெடுத்து வருவதுடன், இருவகை தொற்றுக்கள் ஒன்று சேர்வதால் பாரியளவில் பாதிப்பு ஏற்படும் என அச்சம் கொள்வதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

---

## இரணைமடுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போது பெய்து வரும் கன மழையின் காரணமாக இரணைமடு குளத்தின் வான் கதவுகள் இன்று சிறிய அளவில் திறக்கப்படும். எனவே இரணைமடு கீழ்ப்பகுதியில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

36 அடி கொள்ளளவைக் கொண்ட இரணைமடுக் குளமானது தற்போது 35 அடியை அண்மித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

---

## காருடன் மோதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியில் உள்ள ரயில் கடவையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்த விபத்தையடுத்து, 200 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டு கார் தீப்பிடித்து எரிந்தது. அத்துடன் ரயிலின் முன்பகுதியும் கருகி சேதமடைந்துள்ளது.

---

## கசூரினா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாணவன் ஒருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்.

நேற்று மாலை 3.30 மணியளவில் இளைஞன் காணாமற்போன நிலையில் அவரைத் தேடும் பணிகளில் கடற் படை மற்றும் உள்ளூர் மீனவர்கள் ஈடுபட்டனர். பின் சடலமாக அவர் மீட்கப்பட்டார்.

கோண்டாவிலைச் சேர்ந்த லோகீஸ்வரன் (வயது- 17) என்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவனே உயிரிழந்துள்ளார்.

கோண்டாவிலிருந்து 20 பேர் காரைநகர் கசூரினா உல்லாசக் கடற்கரைக்குச் சென்றுள்ளனர். அவர்கள் குளித்துக் கொண்டிருந்த நிலையில் இருவர் அலையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். எனினும் ஒருவர் மீண்டு வந்த நிலையில் மற்றையவர் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
SAI CLEANING & KIDS WORLD
பிரதான வீதி, பருத்தித்துறை.
077 296 9830


அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
SAM LANKA
SAM LANKA
Direct Importers & Distributors
அனைத்து வகையான
LED பொருள்கள்
பாதுகாப்புச் சென்சார்கள்,
சி.சி.ரி.வி.கமராக்கள்,
மின் பாகங்கள், மின் கருவிகள்
அனைத்தும் எம்மிடம்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
இல.367, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
infosamlanka@gmail.com
021 222 1002,
0777 456 848,
0778 209 424


வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
ST.ANTONY'S
COMPUTER
மேசைக்கணினி
மடிக்கணினி
கண்காணிப்புக் கருவி
போட்டோ பிரதி இயந்திரம்
DELL
hp
acer
Pioneer SECU
021 222 4865, 075 0698608
இல.189, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4865, 075 0698608
189, K.K.S.Road, Jaffna Town.


எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
ஸ்ரீ குமரன் நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
அழகிற்கு அழகு சேர்க்கும்
பாரம்பரியம் மிக்க அழகிய தரம்
குன்றாத தங்க ஆபரணங்களை
உங்கள் எண்ணம் போல் தெரிவு
செய்து பெற்றுக்கொள்ள நாட
வேண்டிய ஒரே இடம்
Sree Kumaran Jewellers
இல.74, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
021 226 4465, 077 873 3482


அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்
செல்லமுத்தூஸ்
புடைவையகம்
SELLAMUTHUS TEXTILES
ஏவி 20-57, பிரதான வீதி, நெல்லியடி.
AV 20-57, Main Street,
Nelliady, Karaveddy.
021 226 3238,
077 779 5726

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மோடியும் கோட்டாவும்

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ், தனது கேள்வி – பதில் பகுதியில் இன்றைய அரசியலுக்கு முக்கியமான ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அது நோக்கற்பாலது.

‘இரும்பு மனிதராய் வர்ணிக்கப்படும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியை விவசாயிகள் போராட்டம் மண்டியிடச் செய்து மன்னிப்புக் கேட்க வைத்து விட்டதே?’ – என்பது தான் கேள்வி.

இன்றைய இலங்கை அரசியலைப் பொறுத்தவரையிலும் கூட ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்த கேள்வி இது.

இந்தியாவில் ஏற்பட்ட நெருக்கடியைப் போல இலங்கையிலும் ஒரு விவசாயத் துறை நெருக்கடி – இக்கட்டு – ஏற்பட்டது.

இலங்கையிலும் இந்தியாவிலும் சமாந்தரமான ஒரு விவசாயிகள் நெருக்கடி அரங்கேறிக் கொண்டிருக்கையில். இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க நாடு என்று கருதப்படும் பாரத தேசத்தின் தலைமைத்துவத்தில் இருக்கும் – இரும்பு மனிதர் என்று போற்றப்படும் – பிரதமர் நரேந்திர மோடி எவ்வளவு அரசியல் நாகரீகத்தோடு – உயர் பண்பியல்போடு – நடந்து கொண்டார் என்பதும், அதேவேளை இலங்கையின் ஆட்சிப்பீடத்தின் தலைவராக முழு நிறைவேற்றதிகாரத்துடன் விளங்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எவ்வளவு அரசியல் அற்பத்தனத்துடன் செயற்படுகின்றார் என்பதும் ஒப்பிட்டுக் கவனிக்கப்பட வேண்டியவை.

ஒரு தலைவனிடம் இருக்கக்கூடிய குற்றங்களை செந்நாப் போதகன் வள்ளுவன் வரிசைப்படுத்திய ஒழுங்கில் குறிப்பிடுகின்றார் கம்பவாரிதி.

உயர்ந்தோரைப் பணியாமையும், முடிக்க முடியாத செயலாயினும் அதனை முடித்தே விடுவேன் என்று நினைத்தலும் ‘மாண்பிறந்த மானம்’ என்ற குற்றம் என உரையாசிரியர் பரிமேலழகரை மேற்கோள்காட்டி கம்பவாரிதி விளக்குகின்றார்.

ஒரு தலைவன், ஒரு முடிவை அறிவித்த பின்னர், அது தவறென்று உணர்ந்தால், மானம் பாராமல் அதிலிருந்து பின்வாங்க வேண்டும். ஒரு தலைவன் பிழையான முடிவை எடுத்து, அதன் தவறை உணர்ந்த பின்னும், பின்வாங்க மறுப்பானாயின் அவனோடு அவன் தேசமும் அழியும். அதனால்தான் ‘மாண்பிறந்த மானத்தைக்’ குற்றம் என்கிறார் வள்ளுவர்.

வள்ளுவப் பெருந்தகையின் அந்தக் கருத்து முற்றிலும் உண்மை என்பதை இலங்கை, இந்திய நடப்புகள் இன்று நிரூபிக்கின்றன.

இரும்பு மனிதன் மோடி விவசாயிகள் தொடர்பான தனது சட்டங்களை விலக்கிக் கொண்டமை மட்டுமல்ல, அந்தச் சட்டங்களைக் கொண்டு வந்த தனது அரசின் சார்பில் தனது நாட்டின் விவசாயிகளிடம் மன்னிப்பும் கோரி பெருந்தன்மையுடன் நடந்து, வள்ளுவர் வழி செயற்பட்டு, உயர்ந்து – விஞ்சி – நிற்கின்றார்.

இலங்கையின் அறிஞர்கள், நிபுணர்களின் ஆலோசனைகளைப் புறம் தள்ளி, உதாசீனப்படுத்தி ஆலோசனைகளை நிராகரித்து, அசேதன உரங்கள், இரசாயனக் களைகொல்லிகள் போன்றவற்றுக்குக் கண்மூடித்தனமான தடையை எதேச்சதிகாரமாக விதித்து, நாட்டின் விவசாயத்துறையை நாசமாக்கி, பொருளாதாரத்தை நட்டாற்றில் மூழ்கடித்துவிட்டார் அதி உத்தமர்.

ஆனால் இந்த வரலாற்றுத் தவறுக்கு – மோசமான நடத்தைக்கு – அவர் பொறுப்பேற்கவுமில்லை, நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்கவுமில்லை. அவரது அந்தத் தீர்க்கதரிசனமற்ற நடவடிக்கையின் விளைவால் ஏற்பட்ட அழுத்தங்கள், நெருக்கடிகள் அந்த முடிவிலிருந்து விலகுவதாக அவரை அறிவிக்கச் செய்தனவே தவிர, தவறுக்கு அவர் வருந்தவேயில்லை. மாறாக தனது முடிவால் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு அதிகாரிகளைச் சாடி நிற்கின்றார் அவர்.

வள்ளுவன் காட்டும் அறம் சிங்களத் தலைவர்களுக்குப் புரிந்தால் நம் நாட்டுக்கு ஏன் இந்தக்கதி?

# தீர்வு கிடைக்காவிட்டால் பதவி விலகுவதற்கு தயார்!

## இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவிப்பு



மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் பதவி விலக தயார் என இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பதவிகளுக்கு பயந்து பதவிகளை காக்க வேலை செய்பவர்கள் நாங்கள் அல்லர், பதவிகளை விட்டு விலக வேண்டுமாயின் அதற்கும் தயாராக இருக்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

# சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் புதிய ஆண்டில் சத்தியப் பிரமாணம்

திருகோணமலை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் புதிய ஆண்டில் சத்தியப் பிரமாணம்செய்யும்நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்தகுமார டேப் தலைமையில் சிறைச்சாலை முன்றிலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேசியக் கொடியை சிறைச்சாலை அத்தியட்சகர் ஏற்றி வைத்தார். இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு புது வருடத்தில் சத்தியப் பிரமாணம் செய்து வேலைகளை பொறுப்பேற்று கொண்டார்கள்.

இதன் போது சிறைச்சாலை பிரதான அத்தியட்சகர் சம்பத் ஜெயவர்த்தன மற்றும் ஜெயிலர், புனர்வாழ்வு அதிகாரிகள் உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் சிறையில் உள்ள இந்திய மீனவரை பார்வையிட்டார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறைச்சாலைக்கு சென்று பார்வையிட்டார்.

நேற்று (சனிக்கிழமை) மதியம் ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு வந்த அமைச்சர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அவருடைய விஜயத்தின்போது யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகளும் இணைத்திருந்தனர்.

இதன்போது புதுவருடத்தை முன்னிட்டு இந்திய மீனவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பன அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டன.

# முல்லைத்தீவில் உயிருக்கு போராடும் காட்டு யானை!



முல்லைத்தீவு குமுழமுனை மேற்கு கரடிப்பூவல் பகுதியில் உடல் நிலை பாதிக்கப்பட்ட யானை ஒன்று விவசாய நிலத்தில் வீழ்ந்துள்ளது.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மேற்கொண்டுநடந்துகொள்ளமுடியாத நிலையில் நிலத்தில் வீழ்ந்த நிலையில் குறித்த யானை காணப்படுகின்றது.

சுமார் மூன்றரை வயதுடைய குட்டி யானை வாய்காயத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த சில நாள்களாக உணவு உட்கொள்ளமுடியாத நிலையில் விவசாயிகளின் விளைநிலத்திற்குள் வந்து வீழ்ந்துள்ளது.

யானை வீழ்ந்துள்ள சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு கிராம மக்கள் தகவல் கொடுத்துள்ளார்கள்.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை மருத்துவர் டி.கிரிதரன் தலைமையிலான மருத்துவ குழுவினர் யானைக்கு சிகிச்சையளித்துள்ளார்கள்.

யானையின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு சிகிச்சை மேற்கொண்டுள்ளார்கள், இருந்தும் யானை எழுந்து நடக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

குமுழமுனை கரடிபூவல் கிராத்தில் யானை வேலி, இல்லாத நிலையில் காட்டு யானையின் தொல்லையால் நாளாந்தம் விவசாயிகள் அழிவை சந்தி;துவருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்கள்.

நிலக்கடலை, உழுந்து மற்றும் சோளம் போன்றசெய்கையை மேற்கொண்டுவருவதாகவும் யானைகளால் பாதிப்பு உளளது என்றும் தெரிவித்துள்ளார்கள்.

யானைக்கு சிகிச்சை மேற்கொண்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றார்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச நாணய நிதியத்தை அரசு நாடாதிருக்க சீனாவின் அழுத்தங்கள், நெருக்கடிகளே காரணம்

## விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடாதமைக்கு சீனாவின் அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகளே காரணம் என ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தனையும் மீறி இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் சீனாவால் அடுத்த கட்டத்தில் கொடுப்பதாக வாக்குறுதியளித்துள்ள சகல நிதியும் நிறுத்தப்படும் எனக் கூறினார்.

அத்தோடு அவர்கள் மூலமாகக் கிடைக்கப்பெற்றுள்ள கடன்களையும் மீள செலுத்த கடுமையான அழுத்தம் கொடுப்பார்கள் என்றும் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இதேநேரம் சர்வதேச நாணய நிதியத்தின் மூலமாக கடன்களைப் பெற்றுக்கொண்டால் எவருக்குமே தரகுப் பணம் கிடைக்காது என்பதாலேயே அவர்கள் இதுவரை சர்வதேச நாணய நிதியத்தை நாடவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை பாரிய நிதி நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ள இந்த நிலையிலும் அரசாங்கம் மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்க மட்டுமே முயற்சிக்கின்றது என விஜயதாஸ ராஜபக்ஷ குற்றம் சாட்டினார்.















# உருளைக்கிழங்கு,பெரிய வெங்காயம் வர்த்தக வரி 30 ரூபாவினால் குறைப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைவாக நிதியமைச்சரின் அனுமதியுடன் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றுக்கான விசேட வர்த்தக பொருள் வரியை ஒரு கிலோகிராமுக்கு 30 ரூபா என்ற அடிப்படையில் குறைக்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதன் ஊடாகப் பொது மக்களுக்கு நிவாரணத்தை வழங்கும் நோக்கில் இந்த வரிக்குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.



அதற்கமைய 2007 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க வர்த்தகப் பொருள் வரிச்சட்டத்தின் 2 ஆவது அத்தியாயத்துக்கமைய 2260 கீழ் 72 இலக்கத்திலான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.












சொர்க்கம் திருமண சேவை
இல.102/ A , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மணமகன் விபரம்

பிறந்த திகதி - 21.08.1987 மதம் - இந்து
ஜாதி - N ஆண்
நட்சத்திரம் - புனர்பூசம் 4ம் பதம்
கி.பா - செவ் - 7 இல் சூரிய செவ்வாய்
தகைமை - BA
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - படித்த அழகிய பெண்

பிறந்த திகதி - 16.02.1985 மதம் - இந்து
ஜாதி - S ஆண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - செவ் - 4 இல்
தகைமை -
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - உத்தியோகப் பெண்

பிறந்த திகதி - 24.10.1989 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - செவ் - 2இல்
தகைமை - அரச உத்தியோகம் தொழில் - அரச உத்தியோகம்
எதிர்பார்ப்பு - உத்தியோகப் பெண் இல்லாதுவிடில் சீதனம் கொடுக்கக் கூடிய பெண்

மணமகள் விபரம்

பிறந்த திகதி - 22.08.1992 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா -
செவ் - 12
தகைமை - HNDA
தொழில் - MOH
எதிர்பார்ப்பு - உத்தியோகம்

பிறந்த திகதி - 03.09.1994 மதம் - இந்து
ஜாதி - N பெண் நட்சத்திரம் - பூசம்
கி.பா - செவ் - 7 இல்
தகைமை - BA
தொழில் -
எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன்

பிறந்த திகதி - 04.01.1994 மதம் - இந்து
ஜாதி - N பெண் நட்சத்திரம் - அஸ்தம்
கி.பா - செவ் - 7 இல் சூரி/ செவ்
தகைமை - BA தொழில் -
எதிர்பார்ப்பு - உத்தியோக மணமகன்

077 650 5097, 077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா - 001415666611855

மாங்கல்யா லக்ஷ்மி நாராயணா திருமண சேவை
இல.266, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 01.04.1988 மதம் - இந்து
ஜாதி -Vபெண் நட்சத்திரம் - உத்தரம் 3
கி.பா - 15 செவ் - 9 இல்
தகைமை - B.Com தொழில் - DO அரசசேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 23.11.1991 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - ரோகினி 4
கி.பா - 21 செவ் / சூரி 10 இல்
தகைமை - IT Soft ware Eng. தொழில் - Company
எதிர்பார்ப்பு - வெளிநாடு உள்நாடு மணமகன்

பிறந்த திகதி - 21.11.1992 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - அத்தம்
கி.பா - 13 செவ் 11 இல்
தகைமை - BSc தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - Doctor, Eng.அரச உயர்பதவி மணமகன்

பிறந்த திகதி - 12.08.1993 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - கார்த்திகை 4
கி.பா - 46 செவ் 5 இல்
தகைமை - BBA, MBA தொழில் - அரசசேவை கொழும்பு
எதிர்பார்ப்பு - அரசசேவை பட்டதாரி கொழும்பில் தேவை

பிறந்த திகதி - 05.03.1993 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 18 செவ் 7 இல்
தகைமை - Business Management தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகன் சேவை

பிறந்த திகதி - 30.08.1990 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 30 செவ் 1 இல்
தகைமை - Bsc. Msc தொழில் - ஆராய்ச்சியாளர்
எதிர்பார்ப்பு - அரசபட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 02.06.1993 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - விசாகம் 1
கி.பா - 69 செவ் 9 இல்
தகைமை - Bsc Civil Eng. தொழில் - Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி - 10.04.1987 மதம் - இந்து
ஜாதி V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 07 செவ் 5 இல் -
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன்

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 22.09.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 3
கி.பா - 17 செவ் /சூரி 12 இல் 6"
தகைமை - Bsc. தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகள்

பிறந்த திகதி - 13.08.1979 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி 3
கி.பா - 48 செவ் 5 இல்
தகைமை - Bsc, Msc தொழில் - UK மணமகன்
எதிர்பார்ப்பு - UK+ இலங்கை பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி -28.01.1991 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 31 செவ் 1 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor,Eng. மணமகள்

பிறந்த திகதி - 04.09.1992 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - கேட்டை 4
கி.பா - 15 செவ் 2 இல்
தகைமை - GCE A/L தொழில் - Company work
எதிர்பார்ப்பு - A/L மணமகள் காரைநகர் முன்னுரிமை

பிறந்த திகதி - 25.01.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 33 செவ் 12 இல்
தகைமை - GCE A/L, HNDA தொழில் - கடை உரிமையாளர்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள் காரைநகர் முன்னுரிமை

பிறந்த திகதி - 10.03.1988 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தரம் 4
கி.பா - 5 செவ் 9 இல்
தகைமை - GEC A/L தொழில் -Company உரிமையாளர்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்

பிறந்த திகதி - 21.11.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 23 செவ் 1 இல்
தகைமை - CIMA Complete தொழில் - சொந்த நிறுவனம்
எதிர்பார்ப்பு - வெளிநாடு, உள்நாடு மணமகள்

பிறந்த திகதி - 10.08.1981 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 44 செவ் 12 இல்
தகைமை - GCE A/L தொழில் - சொந்த நிறுவனம்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzelan- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.
காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# இந்த ராஜபக்ஷ அரசு இன்று வெற்று அரசாக மாறியுள்ளது!

## சிறிதரன் எம்.பி. சாட்டை



இந்த அரசாங்கம் இன்று வெற்று அரசாங்கமாக மாறியுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளர் சிறீரஞ்சனை வரவேற்கும் நிகழ்வு பூநகரி பிரதேச சபையில் நடைபெற்றது.

மேற்படிநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

சின்னக் குழந்தைகளைக்கூட பட்டினி போட்டு சாகடிக்கும் ஒரு நிலையை இந்த அரசாங்கம் உருவாக்க முயற்சித்துக் கொண்டு இருக்கிறது. குடிக்கும் பால்மா கூட அளவிற்கு பயன்படுத்த முடியாத அளவிற்கு பொருளாதாரம் அதல பாதாளத்துக்கு போயிருக்கிறது.

சொந்த மக்களையே சொந்த மக்களின் குழந்தைகளையே கொல்லுகின்ற சூழலுக்கு இந்த அரசாங்கத்தினுடைய நிலை மாறி இருக்கிறது.

இந்த சூழ்நிலையில் சிற்றுண்டிகள் உரிமையாளர் சங்கம் பால் தேநீர், தேநீர் கடைகளில் கேட்க வேண்டாம் என்று இலங்கையில் தேநீர் கூட குடிக்க முடியாத அளவிற்கு நிலை மாறி இருக்கிறது.

இந்த அரசாங்கம் பிரதேச சபைகளின் உடைய அதிகாரங்களை மீளப்பறிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைகள் ஊடாகவே பணிகளை ஆற்றி வந்தார்கள். இப்போது அவர்களை சுகாதார அமைச்சோடு இணைத்திருக்கிறார்கள். அதேபோன்று உள்ளூராட்சி சபைகளின் பொதுச் சுகாதார செயற்பாடுகளையும், மத்திய சுகாதார அமைச்சுக்குக் கீழ் கொண்டு வருவதற்கு முயல்கிறார்கள்.

சுகாதார அமைச்சுக்கு கீழே பொதுச் சுகாதாரப் பணிகளை உள்வாங்கினால் பிரதேச சபைகளினுடைய சுகாதார நடவடிக்கைகள், செயற்பாடுகள் அவர்களின் மக்களுக்கான பணிகளை செய்ய முடியாத நிலை உருவாகும்.

ஒரு குறுநில அடிப்படையில் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பறிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிப்பது ஒரு துர்ப்பாக்கியம் ஆகும்.

இந்த அரசாங்கத்தினுடைய போக்குகள் இராணுவ ரீதியாகவும், முழு இராணுவ சிந்தனையோடும் நடைபெறுகின்ற காரணத்தால் மக்களுக்கான பணிகள் அற்று ஒரு வெற்று அரசாங்கமாக – இராசி இல்லாத அல்லது மக்களால் விரும்பப்படாத ஒரு தலைவனாக – இந்த நாட்டினுடைய ஜனாதிபதி மாறியிருக்கிறார்.

மக்களால் விரக்தியடைந்திருக்கின்ற இந்த அரசாங்கம் தன்னுடைய செயற்பாடுகளை மாற்றிக் கொள்ள வேண்டும். மக்களின் விருப்பங்களின் அடிப்படையில் மக்களின் எண்ணங்களின் அடிப்படையில் செயற்படவேண்டும்.


இந்த நாட்டில் இரண்டு தேசிய இனங்கள் உள்ளன. ஒன்று தமிழ்த் தேசிய இனம் மற்றையது சிங்கள தேசிய இனம் சிங்கள தேசிய இனத்துக்கு உள்ளது போன்ற கலை, கலாசாரம், பண்பாடு, மொழி அடையாளங்கள் போன்றன தமிழ்த் தேசிய இனத்துக்கும் உள்ளன.

சிங்கள தேசிய இனத்துக்கு முன்பாக பல ஆயிரம் ஆண்டுகள் பூர்வீகமாக வரலாற்று ரீதியாக மொழி அடையாளங்களோடும், நில அடையாளங்களோடும் பஞ்ச ஈச்சரங்களை வைத்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். ஆகவே, அவர்களின் இழந்து போன இறைமையை வழங்கி அவர்களையும் அணைத்து இந்த நாட்டிலே தேசிய அரசியல் நீரோட்டதைக் கொண்டு சென்றால் இந்த நாட்டின் பொருளாதாரம் மட்டும் அல்ல இந்த நாட்டின் இன ஒற்றுமையும், நாடும் வளர்ச்சி அடையும்.

இவற்றைப் புரிந்து கொண்டு இந்த அரசாங்கம் தமிழர்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# எழில் கதிர்





● அகிலா



# வியர்வை நாற்றத்தை விரட்டியடிக்க வீட்டு மருத்துவம்

நம்முடைய தோல் பகுதியில் இரண்டுவிதமான வியர்வைச் சுரப்பிகள் உண்டு. ஒன்று எக்ரைன் என்றும் மற்றொன்று அபோக்ரைன் என்றும் அழைக்கப்படுகிறது.

நமது உடலின் பல பகுதிகளில் முகம், கை, கால்,நெஞ்சு பகுதிகளில் சுரக்கும் சுரப்பி எக்ரைன் என்று அழைக்கப்படுகிறது. அக்குள்,நெஞ்சுப் பகுதி, பிறப்புறுப்பு பகுதியில் அபோக்ரைன் சுரப்பி சுரக்கிறது. இந்த இரண்டாவது சுரப்பி இருபாலருக்கும் பருவ வயதுக்கு பிறகு உண்டாவதால் குழந்தைகள் மீது துர்நாற்றம் உண்டாவதில்லை.

## நாற்றமடிக்கும் வியர்வை ஏன்?

வியர்வையில் கொழுப்பு, புரதங்களுடன் கெட்ட நுண்ணுயிரிகள் இணைந்து கடுமையான நாற்றத்தை உண்டாக்குகிறது. காற்று உட்புகாத ஈரப்பதமான உறுப்புகள் வியர்வையால் மேலும் துர்நாற்றத்தை உண்டாக்குகின்றன.

இதைப் போக்க தரமான வாசனைத் திரவியங்களை உபயோகித்தாலும் நாள் முழுக்க அவை உங்களை நறுமணத்தோடு வைத்திருக்காது. அதனால் வியர்வை வாடையை உங்களிடமிருந்து நீங்களும் மற்றவர்களும் அனுபவிக்கவே நேரிடும். வீட்டில் இருக்கும் எளிய பொருள்களைக் கொண்டு அக்குளில் இருந்து வரும் வாடை மட்டுமல்ல வியர்வையையும் நிரந்தரமாக விரட்டி அடிக்கலாம்.

## தூய்மையை உறுதி செய்யுங்கள்

தினமும் இரண்டு முறை குளியுங்கள். நறுமண சவர்க்காரங்களை பயன்படுத்தாமல் கிருமிகளை நீக்கும் சவர்க்காரங்களை வைத்தியரின் ஆலோசனையுடன் பயன்படுத்துங்கள்.

மாதம் இருமுறை அல்லது கட்டாயம் ஒருமுறை அக்குளில் இருக்கும் முடிகளை நீக்குங்கள். முடிகளை குறைக்காமல் முற்றிலும் நீக்குவது நல்லது. அக்குளை இறுக்கிப் பிடிக்கும் ஆடைகளை அணியாமல் தளர்வான காற்று உள்ளே போகும் வகையில் பருத்தி ஆடைகளை அணியுங்கள்.

## எலுமிச்சை

தினமும் குளிக்கும் போது ஒரு எலுமிச்சம் பழத்தின் சாறை தண்ணீரில் கலந்து கால் மணி நேரம் கழித்து குளித்து வாருங்கள். எலுமிச்சை கிருமிகளை அழிக்கும் என்பதோடு சிறந்த மண்மூட்டியாகவும் இருக்கும்.

## சந்தனம்

நாட்டு மருந்துக் கடைகளில் சந்தனக் கட்டை சிறிய அளவில் கிடைக்கும். அதை வாங்கி தினமும் இரவு நேரங்களில் படுக்கும் போது சந்தனத்தை நீர் விட்டு குழைத்து அக்குளில் தடவி விடுங்கள். தினமும் இப்படி செய்துவந்தால் வியர்வை நாற்றம் மறைந்து சந்தனம் மணம் கமழும். தரமான, உண்மையான சந்தனம் நல்லது அப்படி கிடைக்காதவர்கள் சந்தனப் பொடி வாங்கி ரோஸ் வோட்டரில் குழைத்து அக்குளில் பூசி வரலாம்.

## மஞ்சள் தூள்

மஞ்சள் சிறந்த கிருமி நாசினி என்பதால் குளித்து முடித்த பிறகு கிழங்கு மஞ்சளை குழைத்து பூசி வாருங்கள். ஆடையின் வெளியே நிறம் தெரியும் என்று நினைப்பவர்கள் வீட்டில் இருக்கும் போது அல்லது இரவு நேரங்களில் தடவலாம். இவை வியர்வை சுரப்பியில் இருக்கும் கெட்ட நுண்ணுயிர்களை அழித்து வாடையைக் குறைக்கும்.

## தயிர்

தினமும் குளிப்பதற்கு முன்பு கட்டித்தயிருடன் ரோஸ் வோட்டர் கலந்து நன்றாக குழைத்து அக்குளில் பூசி அரைமணி நேரம் கழித்து குளிக்கவும். அக்குளில் சோப்பை தவிர்த்து பாசிப்பருப்பு மாவை தேய்த்து குளித்துவரவும். தொடர்ந்து ஒரு மாத காலத்துக்குப் பிறகு வாரம் இருமுறை, ஒரு முறையாக மாற்றிக் கொள்ளலாம். இவை வியர்வை வாடையை நிரந்தரமாக நீக்கும்.

## கற்றாழை

கற்றாழை வாடை என்று கூட வியர்வையை சொல்வார்கள். ஆனால் கற்றாழையை அக்குளில் தேய்த்து மசாஜ் செய்து குளித்து வந்தால் வாடை நீங்கும். அக்குளில் மட்டும் தனித்துவமாக இருக்கும் கருமையும்



நீங்கும். வெளியில் செல்லும் போது அக்குளில் கற்றாழையை மசாஜ் செய்தும் செல்லலாம். நீண்டநேரம் வியர்வை வாடையை வெளியேற்றாது.

## தக்காளி

நன்றாக பழுத்த நாட்டு தக்காளியை மிக்ஸியில் அடித்து அக்குளில் தடவி அரைமணி நேரம் கழித்து குளித்தால் நாள் முழுக்க வியர்வை வாடை இல்லாமல் மகிழ்ச்சியாக உலா வரலாம். ஓய்வு நேரம் கிடைக்கும் போதெல்லாம் இதைச் செய்து வாருங்கள் நல்ல பலன் கிடைக்கும்.

## நறுமணப் பொடி

சந்தனப் பொடி, வெட்டிவேர் பொடி, பாசிப்பருப்பு மாவு, ரோஸ் வாட்டர் அனைத்தையும் குழைத்து அக்குளில் தடவி நன்றாக காய்ந்த பிறகு குளியுங்கள். பிறகு ஈரம் போக துடைத்து அதிக இரசாயனம் இல்லாத டியோரன்டை தடவுங்கள். கடுமையான கோடை காலங்களில் வியர்வை வந்தாலும் வியர்வை நாற்றத்தை உண்டாக்காது.

## புதினா

புதினா இலையுடன் தயிர் சேர்த்து அரைத்து அக்குளில் பூசி காயவிட்டு குளிர்ந்த நீரில் கழுவினாலும் வியர்வை நாற்றம் நறுமணமாக இருக்கும். இதை அக்குளுக்கு மட்டுமல்லாமல் கழுத்துப் பகுதியைச் சுற்றியும் பூசி வரலாம். புதினாவை நீரில் ஊறவைத்தும் குளிக்கலாம்.

## வேப்பிலை

தோல் பராமரிப்பில் முக்கியத்துவம் பெற்ற வேப்பிலை வியர்வை நாற்றத்தை உண்டாக்கும் கிருமிகளை விரட்டி அடிக்கவும் பயன்படுகிறது. வேப்பிலையுடன் மஞ்சளை சேர்த்து அரைத்து அக்குளில் தடவி சவர்க்காரம் பயன்படுத்தாமல் குளித்து வரவும். இது நறுமணம் கொடுக்காது என்றாலும் கிருமிகளை ஒழித்து நாற்றத்தையும் கொடுக்காது. தேவையெனில் ரோஸ் வாட்டரைக் கலக்கலாம்.

வியர்வை வாடை எல்லோருக்குமானது அதிகப்படியான வியர்வை இருந்தாலும் வராத வாடை அக்குளில் இருந்து வெளிப்படும் வியர்வையில் மட்டுமே உணர முடியும். இதனால் பல சங்கடங்களை அனுபவிக்கும் பலருக்கும் இந்தக் குறிப்புகள் எல் லாமே நிரந்தரத்தீர்வாக இருக்கும்.

டியோடிரன்ட், வாசனைத் திரவியங்களை உபயோகிப்பவர்களும் இந்தக் குறிப்புகளைக் கடைப்பிடித்துவந்தால் நாளடைவில் அதிக அளவு இதைப் பயன்படுத்த வேண்டியதில்லை. வியர்வையை விரட்டியடிக்கதான் எளிமையான வீட்டுக்குறிப்புகள் இருக்கிறதே.

# நாற்றத்தைக் கொடுக்கும் ஹோர்மோன்



நறுமணமிக்க சவர்க்காரத்தில் குளித்து வாசனை திரவியங்களைப் போட்டு வெளியில் வந்த அரைமணி நேரத்தில் அனைத்தையும் தூக்கி சாப்பிடும் அளவுக்கு வரும் வியர்வை நாற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுபவர்கள் பலர் உண்டு.

சுத்தமாகத்தான் குளிக்கிறேன். ஆனால் ஏன் இப்படி துர்நாற்றம் வீசுகிறது என்று கவலைப்படுபவர்கள் நம்மில் பலர் உண்டு. அழகு குறித்த எல்லா விடயங்களையும் செய்கிறோம். திருப்தியும் கொள்கிறோம். ஆனால் வியர்வை வாடை வெளியில் தலை காட்டவே தயக்கமாக இருக்கிறது என்று கவலைகொள்ளும் இளம்பெண்களும் அநேகம் பேருண்டு.

இவர்கள் எல்லாம் சந்தையில் இருக்கும் அத்தனை சவர்க்காரங்களையும் , வாசனைத் திரவியங்களயும் மாறி மாறி உபயோகித்து பார்த்து சலிப்படைந்து டியோடிரன்ட்டுக்கும், வாசனைத்திரவியத்திற்கும் வருமானத்தின் பாதியைக் கரைப்பவர்கள். அப்படியும் திருப்தியடையாதவர்கள்.

வியர்வை நாற்றம் என்பது உடலில் சுரக்கும் ஒரு வித சுரப்பிகளில் இருந்து வெளிப்படுகிறது.





# துவரம் பருப்பின் நன்மைகள்

● யதினா

விருந்துக்கதிர்

சைவ சமையலில் சாம்பாருக்கு முக்கிய இடம் உண்டு. சாம்பார் என்றாலே நம் நினைவுக்கு வருவது பருப்பு தான். சாம்பாரின் பிரதானமே துவரம் பருப்புதான். சாம்பார்,பருப்பு சோறு, அரிசி பருப்பு சோறு தொடங்கிப் பல உணவுப் பண்டங்கள் இதை அடிப்படையாகக் கொண்டு தயார் செய்யப்படுகின்றன. துவரம் பருப்பு உடலுக்குச் சரிவிகித உணவைத் தருவதோடு புரத சத்து, விற்றமின் சி , அமினோ அமிலம், நார்ச்சத்து போன்றவை அதிகமாக உள்ளன. இந்த துவரம் பருப்பு சாப்பிடுவதால் ஏற்படும் மருத்துவ ரீதியான பலன்கள் என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம்.

### உடல் எடை அதிகமாக

ஒரு சிலர் உடலில் அதிக சதைப்பற்று இல்லாமல் மிகவும் மெலிந்த தேகம் கொண்டிருப்பர். இவர்களின் இளைத்த உடல் பெருக்க துவரம்பருப்பை பசு வெண்ணெய் விட்டு வதக்கி, சோறு சாப்பிடும் போது இந்த கலவையுடன் பசுவின் நெய்யை கலந்து சாப்பிடுவதால் மெலிந்த தேகம் கொண்டவர்கள் உடலில் சதைப் பிடிப்பு உண்டாகும். உடலுக்கு வலிமை கிடைக்கும்.

நடுத்தர வயதை தாண்டிவிட்டாலே பெரும்பாலானவர்களுக்கு இரத்த அழுத்தம் ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுக்கிறது. துவரம் பருப்பில் பொற்றாசியம் அதிகம் உள்ளது. இது இரத்த ஓட்டத்தை சீராக நடைபெறச் செய்கிறது. இதனால் இரத்த அழுத்தம் குறைந்து, உடலின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. எனவே இரத்த அழுத்த பிரச்சினை தீர அடிக்கடி உணவில் துவரம் பருப்பை சேர்த்து கொள்வது அவசியம்.

உடலில் தசைகளின் வலுவிற்கும், வளர்ச்சிக்கும் மிகவும் அத்தியாவசியமான ஒரு சத்து புரதச் சத்து ஆகும். துவரம் பருப்பில் ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்து அதிகமுள்ளது. புரதமானது செல்கள், திசுக்கள், எலும்புகள், தசைகளின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். எனவே குழந்தைகள் மற்றும் கடுமையான உடல் உழைப்பைக் கொண்டவர்கள் துவரம் பருப்பை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நாம் வேலை செய்யும் போதும், விளையாடும் போதும் அடிபட்டு காயங்கள், புண்கள் ஏற்படுவது மிகவும் சகஜம். இத்தகைய காயங்கள் வெகு விரைவில் ஆறுவதற்கு புரதச் சத்து மிகுந்த உணவுகளை சாப்பிட வேண்டும். காயங்களை விரைந்து ஆற்றவும், செல்களின் மறுவளர்ச்சிக்கும் புரதச்சத்து அவசியமானது. எனவே துவரம் பருப்புகளை அடிக்கடி சாப்பிடுவதால் காயங்கள் விரைவில் குணமாகும்.

இரத்தத்தில் செங்குருதி, வெண்குருதி சிறுதட்டுக்கள் குறைபாட்டினால் இரத்த சோகை நோய் ஏற்படுகிறது. துவரம் பருப்பில் போதுமான அளவு போலேட்டுகள் உள்ளன. எனவே இரத்த சோகை நோய்க்கு துவரம் பருப்பு ஒரு உணவாகும்.

சிலருக்கு அடிபடும் போது உடலில் அடிபட்ட பகுதிகளில் வீக்கம் ஏற்படுகின்றது. இது மேலும் தீவிரமடைந்து உடல் அழற்சியும் ஏற்படுகிறது. துவரையில் உள்ள கனிமச்சத்துக்கள் வீக்கத்தைக் வேகமாக குறைப்பதோடு அழற்சி தன்மையையும் குறைக்கிறது. மேலும் அடிபட்ட இடத்தில் உண்டாகும் வீக்கம் மற்றும் இரத்தகட்டிற்கு துவரம் பருப்பை அரைத்துப் போடுவதால் வீக்கம் விரைவில் குறையும்.

நோய்கள் நம்மைத் தாக்காமல் இருக்க நமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருக்க வேண்டும். துவரையில் உள்ள 'விற்றமின் சி' சத்தானது, உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கிறது. இது இரத்த வெள்ளை அணுக்களின் உற்பத்தியை அதிகரித்து, ஆன்டி ஒட்சிசனாகச் செயல்பட்டு உடல் நலத்தை மேம்படுத்துவதோடு நோய் எதிர்ப்பாற்றலை யும் அதிகரிக்கிறது.

உலகெங்கிலும் இதயம் சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. துவரம் பருப்பில் உள்ள பொற்றாசியம், நார்ச்சத்து, கொழுப்புச்சத்து ஆகியவை இதயத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. பொற்றாசியம் இரத்த அழுத்தத்தைச் சீர் செய்கிறது. எனவே துவரம் பருப்பை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் இதய நலம் மேம்பட்டு, ஆயுள் அதிகரிக்கும்.

துவரம் பருப்பில் உள்ள நார்ச்சத்து உணவை நன்கு செரிமானம் செய்ய உதவுகிறது. மேலும் உடலில் உள்ள கழிவுகளை நீக்கி வெளியேற்றவும் நார்ச்சத்து உதவுகிறது. வயிற்றுப்போக்கு, வாந்தி, மலச்சிக்கல் உள்ளிட்ட செரிமானம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படாமல் துவரம் பருப்பு நம்மைக் காக்கிறது.

# துவரம் பருப்பு சமையல்



**தேவையான பொருள்கள்**

- 150 கிராம் துவரம் பருப்பு
- 2 பெரிய வெங்காயம்
- 3 தக்காளி
- 8 பல் பூண்டு
- 2 பச்சை மிளகாய்
- 2 காய்ந்த மிளகாய்
- 1 மேசைக்கரண்டி மஞ்சள் தூள்
- 1/2 மேசைக்கரண்டி கடுகு
- 1 மேசைக்கரண்டி சீரகம்
- 1/2 மேசைக்கரண்டி உளுத்தம் பருப்பு
- 1மேசைக்கரண்டி பெருங்காய தூள்
- தேவையான அளவு உப்பு
- தேவையான அளவு எண்ணெய்
- சிறிதளவு கருவேப்பிலை

**குழம்பு செய்முறை**

முதலில் வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், மற்றும் கருவேப்பிலையை நறுக்கி, துவரம் பருப்பை நன்கு சுத்தம் செய்து கழுவி அதை சுமார் 10 இலிருந்து 15 நிமிடம் வரை ஊற வைக்கவும்.

15 நிமிடத்திற்கு பிறகு ஒரு பாத்திரத்தை மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து அதில் 2 கப் அளவு தண்ணீர் ஊற்றி நாம் ஊற வைத்திருக்கும் துவரம் பருப்பை நன்கு கழுவி போடவும். (தண்ணீர் சரியான அளவு ஊற்ற வேண்டும் அதிகமாக ஊற்றி விடக்கூடாது.)

அடுத்து அதில் நாம் நறுக்கி வைத்திருக்கும் வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், பூண்டு, மற்றும் மஞ்சள் தூளை சேர்த்து நன்கு கலந்து மூடி வேக விடவும்.

பின்னர் அதில் தேவையான அளவு உப்பு சேர்த்து பருப்பை நன்கு மசித்து விடவும்.

பின்பு ஒரு பாத்திரத்தை மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து அதில் ஒரு மேசைக்கரண்டி அளவு எண்ணெய் ஊற்றி சுட வைக்கவும். (நெய்யை விரும்புவர்கள் எண்ணெய்க்கு பதிலாக நெய்யையும் சேர்த்துக் கொள்ளலாம்.)

பின் உளுத்தம் பருப்பு மற்றும் கடுகை போட்டு கடுகு வெடித்ததும் சீரகம், காய்ந்த மிளகாய், பெருங்காய தூள், மற்றும் கருவேப்பிலையை போட்டு 2 நிமிடம் வரை வதக்கவும்.

2 நிமிடத்திற்கு பிறகு அடுப்பை அணைத்து விட்டு வேக வைத்து எடுத்து வைத்திருக்கும் பருப்பில் ஊற்றி நன்கு கலந்து விடவும்.

# உடலுக்கு மிகவும் அவசியமான தாது இரும்புச்சத்து

உடலுக்கு மிகவும் அவசியமான தாதுக்களில் ஒன்றாக இரும்புச்சத்து இருக்கிறது. உடலின் மற்ற பகுதிகளுக்கு இரத்த சிவப்பணுக்களை கொண்டு செல்வதற்கும் உதவுகிறது. மேலும் ஆற்றலை உற்பத்தி செய்யவும், செல்களின் சுவாசத்தை எளிதாக்கவும் துணை புரிகிறது. ஆண்களை விட பெண்களுக்குத்தான் இரும்பு சத்து அதிகம் தேவைப்படுகிறது. பருவ வயதை எட்டிய பெண்ணுக்கு தினமும் 18 மில்லி கிராம் இரும்புச் சத்து தேவையாக இருக்கிறது.

கர்ப்பகாலத்தில் இரும்புச் சத்தின் தேவை 27 மில்லி கிராமாக அதிகரிக்கிறது. ஆனால் ஆணுக்கோ ஒரு நாளைக்கு 8 மில்லி கிராம் இரும்பு சத்தே போதுமானது. ஆண்களை ஒப்பிடும்போது கர்ப்பகாலத்தில் மூன்று மடங்கு அதிகம் தேவைப்படுகிறது. அதனால் பெண்கள் சாப்பிடும் உணவில் இரும்புச்சத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியம். மாதவிடாய் சுழற்சியும், கர்ப்பமும்தான் இரும்புச் சத்தின் தேவைக்கு முக்கிய காரணமாக இருக்கின்றன.

Their final five wickets fell in the space of 30 balls as England offered the weakest of resistance in front of a jubilant home crowd at the Melbourne Cricket Ground. England's 68 all out is their lowest total in Australia since March 1904 and their ninth lowest score against them in Tests. The result means Australia have retained the Ashes after just 12 days of cricket and will be eyeing a 5-0 series win. The fourth Test will begin in Sydney on 4 January.

Even by the low standards England have shown on this tour, this was an abysmal performance. After being blown away on the evening of the second day, England were always facing a tough task even to make Australia bat again. But no-one could have seen this capitulation coming. The match was done before the lunch break, England's batters undone the night before by Mitchell Starc and Pat Cummins' pace before succumbing to the 32-year-old Boland's relentless accuracy.

Root, as he has done all year, has carried England. During the second innings at Melbourne, he went past 1,700 Test runs for the calendar year. England's next best, Rory Burns, has managed 530 in the same period. Relying on one man, who is also captain, was never going to be enough. England made four changes for Melbourne and still put in their worst batting performance of the series. Their bowling on the second day was the one bright point, with the indefatigable James Anderson and Mark Wood's pace unsettling Australia. However, the same problems that have plagued England with the bat remain. And there seems to be no solution.

As bad as England's batting has been, Australia's bowling has been superb, with every change they make working in their favour. It was Boland, brought into the squad as a replacement for the injured Josh Hazlewood, who took them apart at the MCG, albeit he was helped by England's rhythmless batting. His every move was cheered by the home crowd, with Boland raising the ball to them as he dismissed Wood to claim a five-wicket haul.

# Sri Lanka Shuts Three Foreign Missions



Sri Lanka announced on Monday the closure of three overseas diplomatic missions in a bid to save foreign currency reserves, as the country's central bank slapped tighter controls on dollars needed to finance essential imports.

The Sri Lankan High Commission (embassy) in Nigeria and consulates in Germany and Cyprus will be closed from January in the restructuring, the foreign ministry said.

"The restructuring is undertaken with a view to conserving the country's much needed foreign reserves and minimising expenditure related to maintenance of Sri Lanka's missions overseas," the ministry said in a statement.

The closure of the three missions came on the same day the Central Bank of Sri Lanka tightened restrictions on foreign currency remittances received by locals.

It ordered all commercial banks to hand over a quarter of their dollar earnings to the government, up from 10 percent.

This means banks will have even fewer dollars to give to private traders who are importing essential goods.

The central bank has appealed for foreign currency -- even the loose change of people returning from overseas trips. The government insisted it can meet its obligations.





# கல்விக்கதிர்



# ‘சிறுகதை எழுதுவது எப்படி?’

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஆனால் சிறுகதை என்றவடிவம் விரிவான சித்தரிப்புகளுக்கு இடம் கொடுக்காது. ஏற்கனவே சொன்னது போல திருப்பம்தான் அதன் மையம். அதை நோக்கி அது ஓடிக் கொண்டிருக்கவேண்டும். விரிவாக விவரித்துக் கொண்டிருந்தால் வடிவ ஒருமை கைகூடாது.

ஆகவே சிறந்த சிறுகதைகள் அதிக சொற்கள் இல்லாமல் கதையோட்டத்தின் போக்கிலேயே கதைக்களத்தையும் சித்தரித்துச் செல்லும். எவ்வளவு சுருக்கமாக சொல்லமுடியுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொல்வது நல்லது. ஆனால் கதைக்களம் தெளிவாக உருவாகவும் வேண்டும்.

பழையகாலக் கதைகளைப் பார்த்தால் முதலில் கதைக்களம், பிறகு மையக்கதாபாத்திரம், பிறகு எதிர் கதாபாத்திரம் என்று சம்பிரதாயமாக கதையைச் சொல்வதைக் காணலாம். சிங்கப்பூர் விமானநிலையம் பத்து நிமிடத்திற்கு ஒரு விமானம் ஒரு இறங்கும் இடம் அது என்பதனால் ஒரே கூட்டம். உலகம் முழுக்க உள்ள பலவகையான மனிதமுகங்கள்... என்றெல்லாம் கதைக் களத்தை வர்ணித்துவிட்டு,எட்டுபத்துக்கு வந்துசேர்ந்த விமானத்தில் நிர்மலா வந்து இறங்கினாள். நிர்மலாவுக்கு வயது இருபது. அழகானவள். எம்பிஏ படித்திருக்கிறாள். கண்டிப்பானவள். என்று மையக்கதாபாத்திரத்தை அறிமுகம்செய்து, அதன் பின் நிர்மலாவை வரவேற்க ஹரி வந்திருந்தான். அவளது காதலன்.அவளுக்கு நேர்எதிர். எதிலும் ஒழுங்கில்லாதவன்.என்று எதிர்கதாபாத்திரத்தை அறிமுகம் செய்து அதன் பின் பிரச்சினையை சொல்லி கதையை நடத்துவது இன்றும்கூட கதைகளில் காணக்கிடைக்கிறது. இது மிகப் பழைய ஒரு ‘அமெச்சூர்’ எழுத்துமுறையாகும்.

குறைவான சொற்களில் போகிறபோக்கில் சொல்லிச்செல்வதே சிறுகதைக்கு வடிவ நேர்த்தியை உருவாக்கும். மேலே சொன்ன கதையை இப்படி எழுதிப் பார்க்கலாம். விமானநிலையத்துக்கு ஹரி சீவாத தலையுடன் வந்திருந்தான். லக்கேஜை நான் எடுத்துக் கொண்டுவருகிறேன் என்றவன் ரகசியமாக நீ ரொம்ப அழகாக இருக்கிறாய் என்றான். சும்மா சோப்பு போடாமல் வேலையை பார் என்று அவனை கைப்பையால் அடித்துவிட்டு நிர்மலா வாட்சைப்பார்த்தாள். எட்டுபதினைந்து.

பல சிறுகதைகளில் கதைக்களம் ஓரிரு வார்த்தைகளில் சொல்லப்பட்டிருக்கும். சில கதைகளில் ஊகிக்க விடப்பட்டிருக்கும். சிலகதைகளில் கதைக்களம் முற்றிலும் மறைந்திருக்கும். ஆனால் கதை எங்கே, எப்போது நிகழ்கிறது என வாசகன் உணர்ந்திருப்பான்.

மேலே சொன்ன கதையில் ‘ஓர் ஊரில்’ என்பது கதைக்களம்.

சிறுகதையில் ஒரே ஒரு கதைக்களம் இருப்பது வசதி. ஒருமுறை கதைக்களம் மாறுவதும் பெரிய சிக்கலைக் கொடுக்காது. அதற்குமேல் கதைக்களத்தை மாற்றினால் சிறுகதையின் ஒருமை சிதறும். வாசகன் கதையை ‘இழுவை’யாக உணர்வான்.

### 4. கதைமுடிச்சு

காகத்தை ஏமாற்ற நரி முயல் கையில் கதைமுடிச்சு விழுகிறது. கதையின் மையமான நிகழ்ச்சி நடக்கும்போது முடிச்சு உருவாகலாம். மையமான கேள்வி எழும்போது முடிச்சு உருவாகலாம்.

பெரும்பாலும் மையக்கதாபாத்திரத்தை ஒட்டித்தான் முடிச்சு உருவாகும். அதற்கு எதிர் கதாபாத்திரம் காரணமாக இருக்கும்.

### 5. திருப்பம்

மேலே சொன்ன முடிச்சை கதை எப்படி அவிழ்க்கிறது என்பதுதான் கதையின் இறுதி. சிறுகதையில் அது எப்படி, அவிழும் என்று வாசகன் ஊகிக்கிறானோ அதற்கு அப்பால் சென்று புதிய ஒரு கோணத்தில் அதை அவிழ்ப்பதே திருப்பம் ஆகும்.

### 6. தலைப்பு

கதையின் தலைப்பு என்பது ஒரு மனிதருக்கு பெயர் போடுவதுபோல ஓர் அடையாளம் மட்டுமே. நினைவில் நிற்கும் தலைப்பு போடுவது நல்லது

ஆனால் தலைப்பில் செய்யக்கூடாதவை சில உள்ளன

அ. கதையின் மையம் என்ன, சாரம் என்ன என்றெல்லாம் ஆசிரியனே சொல்வதுபோல தலைப்பு வைப்பது தவறு. உதாரணம் ‘ மனமே மருந்து!’

ஆ. எல்லாரும் போட்டு தேய்ந்து போன பாணியில் தலைப்பு போடக்கூடாது. உதாரணம் ‘கற்க மறந்த பாடங்கள்’ ‘தோணியும் வண்டியில் ஏறும்’

இ. கதையின் சாரத்தை படிமம் மூலம் சுட்டும் தலைப்பு வைக்கலாம். அது கதையை நினைவில் நிறுத்த உதவும்.ஆனால் அது மிக வெளிப்படையாக இருக்கக் கூடாது. வாசகனின் கற்பனைக்கு அது தடையாகும்.

### சிறுகதையின் இடைவெளி

நவீன இலக்கியப் படைப்புகளில் முக்கியமான ஒருவிடயம் உண்டு. அதை ‘வாசக இடைவெளி’ என்று திறனாய்வாளர் சொல்வார்கள். ஒரு படைப்பு வாசகன் தன் கற்பனையின் மூலம் நிரப்பிக் கொள்வதற்கு விடும் இடைவெளிதான் அது.

இதற்கான தேவை என்ன? பழைய பாணியில் இலக்கியங்களை ரசிப்பவர்கள் நம்மிடம் இதைப்பற்றி எப்போதுமே கூறுவார்கள் சொல்ல வந்ததை தெளிவாகச் சொன்னால் என்ன? என்று கேட்பார்கள். சொல்லி தெரிவதில் கலையனுபம் இல்லை, கற்பனை செய்வதிலேயே கலையனுபவம் உள்ளது.

இதை ஆர்தர் கோஸ்லர் எழு திய "The art of Creation' என்ற நூலில் விரிவாக விளக்குகிறார். அதற்கு அவர் சொல்லும் உதாரணம் நகைச்சுவை துணுக்கு என்ற வடிவம்.



கதிரன்

நம்முடைய கற்பனையை தூண்டும் படியாக துணுக்கின் அமைப்பு உள்ளது. எதிர்பாராதபடி சட்டென்று கச்சிதமாக அந்த வரி வெளிப்படுவதனாலேயே நாம் அதை ரசிக்கிறோம்.

இதையே இப்படிச் சொல்லலாம். ஒரு ஹிப்பி பேருந்தில் அமர்ந்திருந்தான். அவன் காலில் ஒற்றைச் செருப்பை அணிந்திருந்தான்.அது அவன் கண்டெடுத்த செருப்பு. காரணம் அவன் பொறுக்கித்தனமாக வாழ்கிறவன். அவனருகே வந்து அமர்ந்த முதியவர் ஒரு செருப்பு தொலைந்துவிட்டதா?’ என்று கேட்டார். ஹிப்பி இல்லை. ஒன்று கிடைத்தது என்று பதில் சொன்னான். முதியவர் அதிர்ச்சி அடைந்தார். இதில் ரசிக்க எதுவுமே இல்லை. அதாவது நகைச் சுவைத்துணுக்கு சொல்லும் முறை மூலமே நகைச் சுவையை உருவாக்குகிறது. கொஞ்சமாகச் சொல்லி மிச்சத்தை ஊகிக்கவிடுவதே அதன் வழி.

சிறுகதையின் வடிவமும் கிட்டத்தட்ட இப்படித்தான். ‘சொல்லவந்த விடயத்தை சொல்வது’ அல்ல சிறுகதையின் இயல்பு. கொஞ்சமாகச் சொல்லி பெரும் பகுதியை வாசகனை ஊகிக்கவைப்பதுதான் சிறுகதையின் இயல்பு. இவ்வாறு வாசகனின் ஊகத்துக்காக விடப்படும் மௌனத்தைத்தான் வாசக இடைவெளி என்கிறோம்.

நகைச்சுவைத் துணுக்குகளை ரசிக்க நாம் பழகியிருக்கிறோம். சொன்னதுமே மிச்சத்தை ஊகித்து சிரிப்போம். ஆனால் பல சமயம் வயதான பாட்டி, தாத்தாக்கள் நகைச்சுவைத்துணுக்குகளை ரசிக்க முடியாமல் போவதை பார்க்கலாம். அவர்களுக்கு அவற்றை ரசிப்பதற்கான பழக்கம் அல்லது பயிற்சி இல்லை.

அதைப்போல சிறுகதையிலும் விடப்படும் வாசக இடைவெளியை ஊகித்து ரசிப்பதற்கு கொஞ்சம் பழக்கம் தேவை. தொடர்ந்து படிப்பதன்மூலம் இயல்பாக அது உருவாகிவரும். சிறுகதையை வாசித்து விட்டு ‘சொல்ல வந்ததை தெளிவாகச் சொல்லு ’ என்று எழுத்தாளனிடம் சொல்வதில் பொருள் இல்லை. அப்படிச் சொன்னால் அது சிறுகதை அல்ல.கதையை செறி வாக்குவது. ஏற்கனவே சொன்னது போல சிறுகதை ஒரு திருப்பத்தை அல்லது முத்தாய்ப்பை முன் வைக்கும் வடிவம். அதாவது அது ஒரு புள்ளி மட்டுமே. புள்ளியை வாசக மனதில் மொத்தக் கதையும் செயல்டுகிறது. சிறுகதையின் தொடக்கம் ஒரு போதும் பீடிகையாக இருக்கக் கூடாது. செறிவானபடி கதையை அமைப்பதற்கு சிறந்த வழி கதையை அதன் மையத்திலேயே தொடங்குவதுதான். எதைப் பற்றிய சிறுகதையோ அதையே தொடக்கத்தில் சொல்ல ஆரம்பிக்கலாம்.

### சிறுகதையின் முடிவு

சிறுகதையின் முடிவு அதன் திருப்பத்தில் உள்ளது என்றோம். அது வாசகனை அந்தக் கதையை முற்றிலும் புதிதாக மீண்டும் கற்பனையில் எழுப்பச் செய்ய வேண்டும். அப்படியானால் அது முடிந்தவரை குறைவான சொற்களில் சொல்லப்பட வேண்டும். எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு வாசகனின் கற்பனைக்கு விடப்பட வேண்டும். நல்ல கதைகளில் கடைசி சொற்றொடரில் கதையின் திருப்பம் வெளிப்படுவதைக் காணலாம்.

திருப்பம் வெளிப்பட்டதுமே கதை முடிவது நல்லது. அதற்குப் பிறகு வரும் ஒவ்வொரு சொல்லும் கதைக்குப் பாரமே.

- முற்றும் -

பல புத்தம் புதிய அம்சங்களுடன் உங்கள் படைப்புகளிற்கு களம் அமைக்கிறது கல்விக்கதிர் உங்களுக் கான இந்தப் பக்கத்தில் உங்கள் கல்வி சார்ந்த ஆக்க பூர்வமான படைப்புக்கள்(உதாரணமாக - கட்டுரைகள், விஞ்ஞானம் மற்றும் பொது அறிவு சார்ந்த விடயங்கள், வினாவிடைகள், புத்தம் புதுக் கண்டுபிடிப்புகள், இலத்திரனியல் உபகரணங்கள் சார்ந்த விடயங்கள்) வரவேற்கப்படுகின்றன.

இவை தமிழ் /ஆங்கில மொழிகளில் இருக்கலாம். ஆக்கங்கள் மாணவர்கள், ஆசிரியர்கள், துறைசார் அறிவுடையோர் அனைவரிடமிருந்தும் எதிர் பார்க்கப்படுகின்றன.

மாணவர்களிற்கான சிறந்த ஆக்கங்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

காலைக்கதிர்,
கல்விக்கதிர்,
இல. 551/A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி
kalaikkathirweekly@gmail.com

தொடர்புகளிற்கு :- 0212223000






- குளத்தூரான்-

# தேனீ வளர்ப்பு [Bee keeping]





ஆக்கம் - ம.பிரேந்திரா
NVQ6 மாணவன்,
யாழ்ப்பாணக்கல்லூரி, விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

**தேனீயின் வாழ்க்கை வட்டம்**

| | முட்டை (நாள்) | குடம்பி (நாள்) | கூட்டுப்புழு (நாள்) | வாழ்க்கை காலம் |
|---|---|---|---|---|
| இராணி தேனீ | 3 | 4-5 | 6-7 | சில ஆண்டுகள் |
| வேலையாள் தேனீ | 3.5-6 | 14-15 | 6-8 | 6-8 வாரம் |
| ஆண் தேனீ | 3 | 5 | 12 | 4-6 வாரம் |




**தேனீக் குடித்தொகையை பிடித்து வளர்த்தல்**

தேனீக் குடியை ஏற்கனவே வளர்ப்பில் ஈடுபடுபவருடன் இருந்து வாங்கலாம். இது இலகுவானது. ஆனால் இயற்கையாக உள்ள தேனீக்குடியை பிடித்து வளர்ப்பதே இலாபகரமானது. இதற்கு சற்று அனுபவம் தேவை.

தேனீக்குடிகளை விருத்தியடையும் காலத்திலேயே வளர்ப்பது சிறந்தது. இலங்கைக்கு ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலம் சிறப்பு வாய்ந்தது.

தேனீக்குடியை நேரடி ஒளிபடாத தாவரங்கள் நிறைந்த இலகுவாக தேனீ வளர்ப்புக் கூட்டினை பரிசோதிக்கக்கூடிய இடத்தில் வைக்க வேண்டும்.

எறும்புகள், முசறுகள், குளவிகள், ஓணான்கள், பறவைகள், தேனீக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். ஆகவே இவை தொடர்பில் பாதுகாப்பாக இருத்தல் வேண்டும்.

தேனீட்டியை இரண்டரை அடி உயரமான தடியில் நிறுத்த வேண்டும். தடியின் அடியில் சிறிதளவு நீரை தேங்கச் செய்வதன் மூலம் எறும்பு, முசறு தாக்கத்தில் இருந்து தேனீக்களை பாதுகாக்கலாம். தேன்கூட்டுச் சுற்றாடலை சுத்த மாக வைப்பதன் மூலம் பீடைத்தாக்கத்தை தவிர்க்கலாம்.

பொந்திலுள் உள்ள தேனீக்குடியை நாம் பிடித்து வளர்க்க முன் சுற்றாடலை தூய்மைப்படுத்தி, பொந்தின் துவாரத்தை பெரிதாக்க வேண்டும். பின்னர் புகையூட்டி மூலம் புகைபோட்டு தேனீயை அமைதிப்படுத்திய பின்னர் வதைகளை எடுத்து சட்டகத்தில் கட்ட வேண்டும். பின்னர் தேனீக்களை பிடித்து பெட்டிக்கு மாற்ற வேண்டும். மிகவும் முக்கியமாக இராணித் தேனீயைப் பிடித்து விட வேண்டும். பின்னர் உணவு சேகரிப்புக்குச் சென்ற மீதி தேனீக்கள் திரும்பி வரும் வரை தேனீப் பெட்டியை அதே இடத்தில் வைத்து மாலையாகிய பின்னர் பெட்டியை வளர்க்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும்.

பின்னர் தேனீப் பெட்டியை குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை பரிசோதிக்க வேண்டும். அடிக்கடி பரிசோதிக்கக் கூடாது. காலையில் மட்டுமே பரிசோதிக்க வேண்டும். மழை பெய்கின்ற போதும், கடும் காற்று வீசும் போதும் பரிசோதிக்கக் கூடாது. தேனீக்களுக்கு சேதம் ஏற்படாதவாறு பார்த்து கவனமாக பரிசோதிக்க வேண்டும்.

∗ **தேனீக்களின் பராமரிக்க வேண்டிய காலங்கள்**

1. விருத்திக் காலம்
2. தேன் உற்பத்தி காலம்
3. பற்றாக்குறை காலம்

**விருத்திக் காலம்**

போதியளவு உணவு கிடைக்கும் காலம் ஆகும். இராணித்தேனீ அதிக முட்டைகளை இடும். குடித்தொகை அதிகரிக்கும். இதனால் வெப்பநிலை அதிகரிக்க தேனீக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறி புதிய குடியை உருவாக்கும். இது 'திரளாகக் கலைதல்' எனப்படும். இது வர்த்தக ரீதியான தேனீ வளர்ப்பில் நட்டத்தை ஏற்படுத்தும். ஆகவே இதனைத் தடுக்க பழைய இராணித் தேனீயை அகற்றி புதிய இராணித் தேனீயை சேர்ப்பதன் மூலம் செய்யலாம். அல்லது தேனீப் பெட்டியில் போதிய இடவசதியை அதிகரிக்க வேண்டும்.

**தேன் உற்பத்தி காலம்**

விருத்திக் காலத்தின் பின்னர் வரும் காலப்பகுதி ஆகும். இது 4 - 6 வாரம் வரை இருக்கும். சிறப்பான சூழ்நிலையில் 8 வாரம் வரை தேன் உற்பத்தி காலமாக இருக்கும். வர்த்தக ரீதியான தேனீ வளர்ப்பில் விசேட கவனம் செலுத்தி தேனை சேகரிக்க வேண்டிய காலமாகும்.

**பற்றாக்குறை காலம்**

இது தேன் உற்பத்திக் காலத்திற்குப் பின்னர் வரும் காலப்பகுதி ஆகும். இது ஐந்து மாதம் வரை இருக்கக் கூடும். தேனீக்கள் இருப்பிடத்தை மாற்றும் காலப்பகுதி ஆகும்.

மெழுகு அந்தின் தாக்கத்தை தடுக்க கவனமாக இருக்க வேண்டியதுடன் அடிப்பலகையை இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு ஒரு தடவை சுத்தப் படுத்த வேண்டும்.

இக்காலப்பகுதியில் சேமிப்பு வதை குறையும் போது செயற்கையான உணவு வழங்க வேண்டும். உணவாக சீனிக் கரைசல், கரும்புச்சாறு, பழச்சாறு அல்லது தேன் வழங்கலாம்.

உணவு இரண்டு முறையால் வழங்கப்படும்.

1. திறந்த முறை
2. மூடிய முறை

திறந்த முறை - தட்டான பாத்திரத்தில் உணவு வழங்க வேண்டும். உணவுக் கரைசலில் தேனீ மூழ்கி இறப்பதை தடுக்க குச்சிகள் இட வேண்டும்.

மூடிய முறை - மூடியில் துளையிடப்பட்ட போத்தலை பாவிக்க வேண்டும். துளைகளில் உணவை உறிஞ்சிப் பெற்றுக் கொள்ளும்.

சீனிக் கரைசல் - 1kg சீனியை 750ml கொதித்து ஆறிய நீருடன் கலந்து தயாரிக்க வேண்டும்.

**தேன் மெழுகு தயாரித்தல்**

கைவிடப்பட்ட வதைகளை மெல்லிய துணியொன்றில் கட்டி நீரில் வைத்து கொதிக்க விட வேண்டும். அப்போது உருகிய மெழுகு துணியினூடாக வெளியேறி நீரை அடையும். அழுக்குகள் துணியில் மிஞ்சும். நீர் குளிர்ந்ததும் சுத்தமான மெழுகைப் பெறலாம்.

தேனீக் குடியைப் பிரித்தல் - தேனீ வளர்ப்பவரே குடியை பிரிக்கும் செயன்முறையாகும். விருத்திக் காலத்தின் போது திரளாக கலைதல் நடைபெறாமல் இருக்க செய்யப்படும். இராணித்தேனீயுள்ள பெட்டிக்கும், அற்ற பெட்டிக்கும் இடையில் பிரித்த பின் 400 மீற்றர் இடைவெளியில் பேண வேண்டும்.

தேனீக் குடிகளை ஒன்று சேர்த்தல் - நலிவான இரண்டு குடிகளை ஒன்று சேர்த்து விளைதிறனான குடியை உருவாக்கல் ஆகும். கடதாசியின் மீது தேனை தடவி அதன் மீது ஒரு கொலனியை வைத்து மறு கொலனியை அதன் மீது வைக்க வேண்டும்.

மணித்தியாலங்களின் பின் பலமான இராணித் தேனீ பலவீனமான இராணித் தேனீயை கொன்று விடும். அதன் பின் இரண்டு குடித்தொகையும் ஒரு இராணித் தேனீயின் கீழ் வந்து விடும்.

இலங்கையில் குறிப்பாக வட மகாணத்தில் உலர் காலப்பகுதியும் அதிக காடும் காணப்படுவது தேனீ வளர்ப்பிற்கு ஏற்ற சாதகமான அம்சம் ஆகும். ஆகவே சிறந்த விளைதிறனான பராமரிப்பின் கீழ் ஒரு கூட்டில் இருந்து ஆண்டுக்கு இரண்டு தொடக்கம் மூன்று தடவை வரை தேன் சேகரிக்க முடியும். சாதாரணமாக ஒன்றரை தொடக்கம் இரண்டு கிலோ தேனும் சிறந்த பிரதேசத்தில் சிறந்த கவனிப்பின் கீழ் ஆறு தொடக்கம் எட்டு கிலோ தேனும் பெறலாம். தேனுக்கு தேவை சந்தையில் கேள்வி அதிகமாக இருப்பதுடன் உற்பத்தி குறைவாக இருப்பதால் இது இலாபகரமான தொழிலாகவும், மன நிறைவு தரக்கூடிய பொழுது போக்காகவும் அமைகின்றது.


(முற்றும்)



# உயிரானவள்...



கேணிப்பித்தன் ச.அருளானந்தம்




அவன் களைத்து விட்டான். மாலை ஐந்து மணியாகி விட்டது. போனவர் போனவர் தான். இன்னும் பதில் வரவில்லை. போனவர் யாரென்றும் தெரியாது. அவனுக்கு ஆத்திரமும் அழுகையுமாக வந்து விட்டது.

வெளியில் வந்து மருத்துவமனைக்கு வருபவர்களையும் போகின்றவர்களையும் பார்த்து விசாரித்தான். அனைவரும் முகக்கவசம் அணிந்தவர்களாகவே இருந்தனர். தெரியாது என்று கையை விரித்துக் காட்டி விட்டுச் சென்றார்கள். அவனுக்குப் பைத்தியம் பிடிக்காத குறை. வருவோர், போவோரிடமெல்லாம் அவளின் பெயரைச் சொல்லி விசாரித்தான். பலனில்லை. அவனுக்கு மூளையில் ஒரு பொறிதட்டியது. ஆனந்தி ஒரு டாக்டர்தானே? நேரே வார்ட்டினுள் போய் பார்க்க எண்ணினான். அப்படியும் அங்கு பார்க்க முடியவில்லை. யோசித்தான். அவனது கண்கள் எதனையோ கண்டு கொண்டன. ஒரு டாக்டர் வந்துகொண்டிருந்தார்.

அதனை உறுதிப்படுத்துவதாக வந்தவரின் தோளில் 'ஸ்ரெதஸ்கோப்' தொங்கியதைக் கண்டு கொண்டான். அவரெதிரே சென்றான். அவர் முன்னால் நின்று தனது காதலியின் பெயரை எழுதிக் கொடுத்தான். அவருக்குப் புதையலைக் கண்ட சந்தோசம். அநாபயன் அந்தப் பெயருக்கு உரியவரைத்தானே ஆனந்தி தேடிக்கொண்டிருந்தாள். அந்த டாக்டரும் இவனைத் தேடியலைந்ததை அவன் எப்படி அறிவான்? அவனைக் கைகாட்டித் தனது அறைக்கு அழைத்துச் சென்றார். வழியில் கைகளைக் கழுவச் செய்தார். ஏதோ தெளிகருவி கொண்டு முகம், போன்றவற்றைச் சுத்திகரிக்கச் செய்தார். அவனுக்காக அங்கு இருந்த உடை, முகக்கவசம் போன்றவற்றைக் கொடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வித்தார். அந்த டாக்டர் கைகளை அசைத்து ஏதோ சொன்னது தெரிந்தது. ஆனால் புரியவில்லை. இந்தக் கொரோனாவுக்காக இவ்வளவு கெடுபிடிகளா?

அவர் இப்போது ஒரு படிவத்தைக் கொடுத்துப் பேனா வையும் கொடுத்தார். அநாபயன் வாசித்தான். படி வத்தை வாசித்து நிரப்பினான். அவனது பெயர் அநா பயன் எழுதினான். சந்திக்க வேண்டியவர் டாக்டர் ஆனந்தி. எனது வருங்கால மனைவி. அடுத்த மாதம் திருமணம் நிகழவிருக்கிறது. விவரங்களை எழுதி முடித்து அவரிடம் கொடுத்தான். அந்த டாக்டர் அதனை எடுத்து வாசித்துப் பார்த்தார். சுவர் பக்கம் திரும்பி நின்று கொண்டார். பின்னர் அநாபயன் பக்கம் திரும்பி இரண்டு கைகளையும் கூப்பி வணங்கினார். தன்னோடு வரும்படி சைகை செய்து நடந்தார். அநாபயனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் பின்னால் நடந்தான்.

அந்த அறையினுள் பல கட்டில்கள் இருந்தன. பார்க்கும் இடமெல்லாம் கொரோனா பற்றிய அறிவித்தல்கள். முகக்கவசம் அணியுங்கள். கைகளைக் கழுவுங்கள். தனிமையாக இருங்கள் எனப் பல்வேறு அறிவுரைகள். தூரத்தே நின்று அந்த டாக்டர் ஒரு கட்டிலை சுட்டிக் காட்டினார். அவனுக்குப் புரியவில்லை. அவர் இப்போது தனது முகக்கவசத்தை மெதுவாக இழுத்து பேசினார்.

'அதோ அந்தக் கட்டிலில் படுத்திருப்பது டாக்டர் ஆனந்தி. அந்தநிரையில் உள்ள பதினொரு கட்டில்களிலும் எங்கள் டாக்டர்கள்தான். பொல்லாத கொரோனாத் தொற்றிக் கொண்டது.'அவரது கண்கள் பனித்துக் கண்ணீர்த்துளிகள் வெளியேறின. துடைத்துக் கொண்டார். 'இரவு பகல் பாராது கடமையாற்றிய மருத்துவர்கள், தாதியர் உதவியாளர்களுக்கும் தொற்றி விட்டது. அவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தி தீவிர கண்காணிப்புப் பிரிவில் வைத்துள்ளோம். என்னைப் போல் பலர் இவர்களை கண்ணை இமை காப்பதுபோல் விழிகள் மூடாது கவனிக்கிறோம். உங்களைப் பற்றி டாக்டர் ஆனந்தி தினமும் கதைப்பார். எங்களால் முடிந்தவரை கண்காணித்து வருகின்றோம். அவருக்கு வேண்டிய அனைத்தையும் செய்கிறோம். டாக்டர் கரகரத்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தார்.

அநாபயன் அதளபாதாளத்தில் விழுந்து கொண்டிருந்தான். அவனது உள்ளம் இறைவனை இரந்து கொண்டிருந்தது. 'எனது ஆனந்திக்கு விரைந்து சுகத்தைக் கொடு இறைவனே.' அவன் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் சொரிந்தன. துடைத்துக் கொண்டு நிமிர்ந்தான். டாக்டர் அவனையே பார்த்திருந்தார்.

'அநாபயன் கவலை வேண்டாம். கடவுளைப் பிரார்த்தியுங்கள். ஆனந்தி மிகவும் நல்லவர். அவரால் எத்தனை நோயாளிகள் குணமடைந்துள்ளார்கள். அவர்களின் ஆசிகள் அவரைக் காக்கும்.' கூறியவாறே தனது கண்களைத் துடைத்துக் கொண்டார்.

'டாக்டர் ஆனந்தியைப் பார்க்க அவரது வீட்டில் இருந்து யாரும் வருவதில்லையா?' அதிர்ச்சியில் இருந்து விடுபட்டவனின் முதற்கேள்வி. 'ஏன் வருவதல்லை. இன்னும் சிறிது நேரத்தில் தாயும், தந்தையும் வந்துவிடுவார்கள். அவர்களும் உங்களைப் பற்றி விசாரித்தார்கள்.' அவர்கள் உரையாடும்போது ஆனந்தியின் பெற்றோர் வந்தனர். முதலில் அநாபயனை அவர்கள் அடையாளம் காணவில்லை. டாக்டர் அறிமுகம் செய்தார். அநாபயனாலும் அடையாளம் காணமுடியவில்லை. முகக்கவசம் அணிந்திருந்தால் ஆள் அடையாளத்தை அறியமுடியாதிருந்தது.

ஆனந்தியின் தாய் அழுதுபுலம்பினார். 'இந்தக் கொரோனா என்ன பாடு படுத்துகிறது. மகள் இப்ப கஷ்டப்படுகிறாள். அவளின் கஷ்டத்தை எங்களால் பார்க்க முடியவில்லை. பாவம் அவள்.' விம்மினார். அநாபயன் அவரைத் தேற்றினான். 'அம்மா நானும் காலையிலதான் வந்தேன். இவரைப் பழக்கம் பிடித்துத்தான் நிலைமையை அறிந்தேன்.' விம்மினான். ஆனந்தியின் பெற்றோர் அநாபயனைத் தேற்றினார்கள்.

'அம்மா ஆனந்திக்கு என்ன நடந்தது,'அவரது பதிலை எதிர்பார்த்தான். அப்போது ஆனந்தியின் கையசையும் சைகை தெரிந்தது. அநாபயன் எட்டிப் பார்த்தான். அவன் போய்பார்க்க முயன்றான். ஆனால் அங்கே நின்ற டாக்டர் தடுத்துவிட்டார். ஆனந்தி கைகளை ஆட்டி ஆறுதலைத் தெரிவித்தாள். அப்படியே ஓடிப்போய் தூக்கிக்கொள்ள வேண்டும் போலிருந்தது. ஆனால் உள்ளே செல்ல அனுமதியில்லை. அவள் முழுமையாகக் குணமாகும் வரை அவளோடு யாரும் பேசவும் முடியாது. என்ன கொடுமையான நோய்.

டாக்டர் அநாபயனிடம் விடைபெற்றுச் செல்ல முற்பட்டார். பின்னால் ஓடிச்சென்றான். டாக்டர் அப்படியே நின்றார். 'டாக்டர் நான் ஆனந்தி கூடவே நிற்கலாமா'?...

(தொடரும்...)



# இலக்கிய நயம்

● குந்தவி நாச்சியார்.

உலகில் வெவ் வேறு மொழிகள் இருந்த போதும் நம்மருந்தமிழ் போல் சிறப்பும் சுவையும் உள்ள மொழிகள் வேறெதுவும் இல்லை. அதனால் தான் உலகில் அழகும் சிறப்பும் இளமையும் தொன்மையும் வாய்ந்த செம்மொழியாக உலகம் பூராகவும் தமிழ் மொழி வலம் வந்து கொண்டிருக்கின் றது. அத்துடன் தமிழ் மொழியில் காணப்படும் தனிச் சிறப்புகளில் ஒன்று 'திணை' ஆகும். திணை இலக்கணமும் அது கூறும் பாடல் அமைப்பும் உலகின் வேறெந்த மொழியிலும் காணாத சிறப்புத் தன்மையாக தமிழ் மொழிக்கே காணப்படும் சிறப்பியல்பு ஆகும். பொதுவாக மொழிகள் யாவும் காலத்தினை மூன்றாகப் பிரித்து இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனப் பிரித்து நிற்பது நமக்கெல்லாம் தெரிந்ததே. இடம், நேரம், காலம் பொறுத்து மாறு வது மனித மனத்தின் இயல்பாகும். அதாவது நன் றாக குளிருள்ள மழைக்காலம், பனிக்காலத்தில் காணப்படும் காதல் நெருக்கம், வரண்ட நிலத்தில் வேனிற் காலத்தில் இருப்பதில்லை. இவ்விதம் உள்ள இடம், சூழ்நிலை, காலம், நேரம் ஆகியவற்றைக் கொண்டு பிரித்து ஐந்திணை இலக்கணமாக கூறுவது தமிழின் தனிப் பெரும் சிறப்பாகும். அத்துடன் 'மறை பொரு இறைச்சி ப் பொருள் எனப் படும் உள்ளார்ந்த அர்த்தம் கொண்ட பாடல்களும் கொண்ட அக இலக்கியங்களும் மேலும் தமிழின் சிறப்பினைக் கூறும் அம்சங்களாகும்.

தமிழுக்கு முழுமுதலான இலக்கணம் தந்த தொல்காப்பியம் திணை பற்றிக் கூற முற்படும் போது ஐவகை நிலத்திற்கும் ஐந்து திணைகளை கூறியதோடு நின்றுவிடாமல் கைக்கிளை, பெருந்திணை (ஒருதலைக் காதல்) ஆகிய இரண்டினையும் இணைத்து மொத்தம் திணைகள் ஏழு(07) எனக் கூறிநிற்கின்றது. இன்றைய நயமாக நாம் கொள்வது குறிஞ்சித் திணையில் வரும் காதல் பற்றி பாங்கன் தன் தோழனான தலைவனுக்கு உரைப்பதாகும். அதாவது காதல் என்பது உயிரினங்கள் அனைத்திற்கும் பொதுவானதொன்று காதலில் விழுவதற்கு முன்பு அது அறியாமலே நடந்து விடுகிறது. காதலினை வேண்டாம் என அறிவுரை கூற முற்பட்டாலும் அதை யாரும் செவியில் வாங்கிக் கொள்வதில்லை. சர்க்கரை வியாதிக்காரன் சர்க்கரையை உண்ணாமல் விட்டாலும் இனிப்பை விடமுடியாமல் தவிப்பது போல. காதலை ஆதரிக்கும் நண்பர்களே அதனது ஆபத்தை விளக்கி வேண்டாம் என விலக்குவது முண்டு அத் தகையதே இங்கே காணப்படும் குறிஞ்சித் திணைப் பாடலுமாகும்.

**காமம், காமம் என்பே காமம்**
**அணங்கும் பிணியும் அன்றே நினைப் பின்**
**முதைச் சுவற் கலித்தமுற்றா இளம்புல்**
**மூதா தை வந்தலங்கு விழுந்தே காமம்**
**பெருந்தோளேயே!**

இதிலே பாங்கணாய தலைவனின் தோழன் அவனிடம் விளக்கி நிற்கிறான். இப்படி காதல் காதல் என்றால் என்ன, காதல் நம்மைத் தொல்லை செய்யும் பேயா? நம்மைத் துன்புறுத்தும் நோயா? பற்களை இழந்த வயது முதிர்ந்த பசுவானது தன்னால் உண்ண முடியாவிட்டாலும் பசும் புற்களை நாவால் நக்கி சுவைக்க முற்படுவது போலஅது தீராத விருந்து அடைய முடிந்தாலும் அது தீராத வருத்தம் ஆகவே, அது எப்போதும் துன்பம் தருவதாகவே இருக்கும். எனவே பெரும் தோள்களை உடைய எனது நண்பன் தலைவனே இந்தக் காதலில் விழாதே எனத் தன் நண் பனுக்கு புத்தி கூறுவதாக அமைகிறது. இந்தக் குறிஞ்சித் திணைப் பாடலானது இன்றைய காலத்தில் நாம் குறிஞ்சித் திணையில் ஒரு பாடல்பார்த்தோம். மீண்டும் இன்னொரு நயத்தில் அடுத்த வாரம் சந்திப்போம்.

குறுங்கதை

ஷெல்லிதாசன்

# நதிமூலம்

ஐயோ....ஐயோ...ஒரே சிரிப்புதான் ஒரே ஜோக்குத் தான் என்ற வடிவேலுவின் வாய்மொழியை தானும் உதிர்த்தபடி தவராசா வேத நாயகத்தைப்பார்த்துச்சிரித்தான்.

ஏன் தவராசா என்ன உனக்கு நடந்தது.

என்னைப்பாத்து நக்கலடிக்கிறா? பிறகென்ன ஐயா இப்ப ஆறேழுமாசமா வீடுகட்டிறியள். அதுவும் பெரிய வீடெண்டுமில்லை. அதுவும் உங்களிட்டை காசில்லை எண்ட குறையுமில்லை. இப்பிடி ஆய்ஞ்சு ஓஞ்சு வீடுகட்டிற காலமில்லை இது. நவீன காலமையா. உங்கடை காலமெல்லாம் மலையேறிப்போச்சு.

சரி இப்ப நீ என்ன சொல்லவாறாய் தவராசா?

நான் வைகாசி விசாகத்தண்டைக்கு அத்திவாரம் போட்டனான். இப்ப ஆனித் திங்களுக்குள்ளை வீடு முடியப்போகுது.

ஒரு மூண்டு கிழமைக்குள்ளை ஒற்றைத்தட்டு மாடிவீடு.

என்னடா சொல்லுறா தவராசா ஒரு மாசத்துக் குள்ளை கட்டி முடிஞ்சுதோ?

என்ன முடிஞ்சுதோ எண்டு கேக்கிறியள்.

இந்தாங்கோ பிடியுங்கோ வீடுகுடிபூரல் அழைப்பி தழை தவராசா கொடுத்த அழைப்பிதழை வாங்கிய வேதநாயகத்தார் ஆனா உன்னைப்போல சுடுகுது மடியைப்படியெண்டு என்னாலை காரியம் பாக்கேலாது. நான் ஆறுதலாகத்தான் வீடுகட்டுவன்.

ஐ ய ா

இந்தக்காலத்திலை உப்பிடி யெல்லாம் யோசிச்சாளதுவும் செய்ய ஏலாதையா. நல்ல கொன்றாக்ற் காரரிட்டை வீட்டைக் கட்ட குடுக்க வேணும்.

அந்த வேலைக்கு அவங்களுங்கு காசை இறைச் சுப்போட்டு எங்கடைபாட்டுக்கு இருந்தால் போது மையா. வீடுகட்டத்தொடங்கி இரண்டொரு நாள் மட்டுந்தான் வேலையை போய் நான் பாத்தனான்.

அந்த அளவுக்கு அருமையான வேலை ஐயா. சரி ஐயா உதையெல்லாத்தையும் இனிக்கதைச்சு பிர யோசனமில்லை.

ஓம் தவராசா நீ சொல்லுறது சரிதான்.

ஆனால் நான் கொன்றக்ரா வேலையை கொடுக் கேல்லை. நாளாந்தம் கூலி வேலை. நானும் ஒருத்த னாய் நின்று கட்டுகிறன். எதிலையும் என்ரை கட்டுப் பாடுதான் தவராசா. சிரிப்புத்தான் வருகுதையா உங் கடை கதையைக்கேக்க. கட்டுறதோ ஒரு சின்ன வீடு. அதுக்குள்ளை உங்கடை கவனமோ பெருங்கவனம்.

வேலை இல்லாதவங்களாலதான் இந்த அவசர காலத்திலை இப்பிடிச் செய்யேலும் ஐயா என்று சொன்ன தவராசா சரி...சரி..என்ன வாவது செய்யுங்கோ. மறந்திடாமல் குடிபூரலுக்கு வந்திடுங்கோ என்றவன் உந்துருளியில் ஏறி அவ் விடத்தை விட்டகன்றான்.

மிகவும் அழகாக வர்ணம் பூசப் பட்டு கம்பீரமாக எழுந்துநின்ற தவராசாவின் புதிய வீட்டின் புது மனைப் பகு விழா மிகக் கோலாகலா மாக நடந்தேறியது.

திடீரென ஒருநாள் அவசர அவ சரமா வேதநாயகத்தாரிடம் தவராசா ஓடோடி வந்து ‘உங்கடை மேசனை ஒருக்கா பிடிச்சு தருவீங்களா என் றான்’.

ஏனப்பா இப்ப உனக்கு என்ன அவசரம் மேசனைத் தேடுறாய் .ஏன் புதிசா வீடொண்டுகட்ட அத்திவாரம் போடப்போறியா?

அதில்லை.....என இழுத்த தவராசன் என்ரை வீட்டுச் சிவருகளிலை பெரிய வெடிப்பு வந்திருக்கையா. வீட்டிலை இருக்கவே பயமா இருக்கு.

இப்ப தெரியிதே ஒருமாத ஒப்பந்த வேலையின்ரை திறம். பதறாத காரி யம் சிதறாது தவராசா. சரி நீ பயப் பிடாதை நான் கட்டின வீட்டிலை நீ குடும்பமா உன்ரை வீட்டை திருத்தும்வரை வந்து இரு. வாடகையும் தேவையில்லை ஒண்டும் தேவையில்லை என்றார் வேதநாயகத்தார்.

வேதநாயகத்தாரின் வேதவாவக்கைக்கேட்ட தவராசன் அப்பன் முப்பாடன்மார் கட்டின வீடுகள் மாத்திரமல்ல பாலங்கள் எண்ட எல்லாம் அசையா மல் நூறாண்டுகள் கடந்தும் அழியாது வாழும் நதி மூலத்தை அறிந்து வியந்தவண்ணம் அவ்விடத்தை மௌனமாக விட்டகன்றான்.

## பாலியல் துன்புறுத்தலின் பின் கொல்லப்பட்ட

# புங்குடுதீவு யுவதி தர்ஷினி இளையதம்பி

இந்தவாரம் இவர்

ப்ரியமதா பயஸ்

பாலியல் படுகொலைகள் என்பது இலங்கையின் வடக்கு - கிழக்கில் இன்றுவரை குறையாத ஒரு கொடூர நிகழ்வாகவே இருந்துவரு கிறது - காலம்காலமாக ஏதோ ஒரு போர்வையின் கீழ் வயது வேறுபாடற்ற பாலியல் கொலைகளும் பாலியல் சீண்டல்களும் இடம்பெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன. சாரதாம்பாள், கிருஷாந்தி குமார சுவாமி, கோணேஸ்வரி முருகேசபிள்ளை, தர்ஷினி இளையதம்பி, வித்தியா சிவலோகநாதன் என பட்டி யல் நீண்டுகொண்டே செல்கிறதே அன்றி முடிவுறவும் இல்லை இந்தக் கொலைக ளுக்கு முடிவும் இல்லை.

அந்த வகையில் இன்றைக்கு 17 வருடங்க ளுக்கு முன்னர் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் தீவு களில் ஒன்றான புங்குடுதீவு பகுதியில் பாலியல் வல்லு றவுக்கு உள்ளாகி படுகொலை செய்யப்பட்ட இளைய தம்பி தர்ஷினி 1985 ஆம் ஆண்டு பிறந்த இவர் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு, படு கொலை செய்யப்பட்டார். இவர் பாலியல் படு கொலை செய்யப்படும்போது இவருக்கு வயது 20 மட்டுமே .

2005ஆம் ஆண்டு டிசெம்பர் 16ஆம் திகதியன்று, தர்ஷினி இளையதம்பி என்ற 20 வயதான இளம் பெண், புங்குடுதீவில் நிலைகொண்டிருந்த கடற்படை யினரால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்ட பின் கடற்படை முகாமுக்கு அருகிலி ருந்த பாழடைந்த கிணறொன்றினுள் சடலமாகப் போடப்பட்டிருந்தார். கொல்லப் படுவதற்கு முன், அவர் பலரால் பாலியல்வல்லுற வுக்கு உட்படுத்தப்பட்டிருந்த தற்கான தடயங்கள் அவரது உடலில் அதிகம் இருந் தன என வைத்திய சாலையால் வழங்கப்பட்ட மருத் துவச் சான்றி தழில் கூறப்பட்டுள்ளது. தர்ஷினியின் உடலின் பல இடங்களில் நகக்கீறல்களும், பற்கடிக ளும் காணப் பட்டிருந்தமையுடன், அவரது ஒரு மார்பு மிக மோசமாகச் சிதைக்கப்பட்டிருந்தது.



சம்பவம் நடந்த 16 டிசெம்பர் 2005 அன்று தர்ஷினி இளையதம்பி தனது அத்தையின் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். இலங்கை கடற்படை யின் முகா முக்கு அருகில் இருந்த இனம் தெரியாத நபர்களால் அவர் கடத்தப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

மறுநாள் அவளது உடல், இலங்கை கடற்படை முகாமிற்கு அருகில் உள்ள மடுத்துவெளி என்ற இடத் தில் கைவிடப்பட்ட கிணற்றில் முற்றிலும் நிர்வாண மாகக் கண்டெடுக்கப்பட்டது.


யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையின் படி, கழுத்தை நெரித்துக் கொலை செய்வதற்கு முன்னர் அவர் கொடூரமான முறையில் கற்பழிக்கப்பட்டார். விரல் நகங்கள் மற்றும் கடித்ததால் ஏற்பட்ட பல காயங்கள் அவரது உடலின் பல பாகங்களில் காணப் பட்டன. அவளது மார்பகங்களில் ஒன்று கடுமையாக கடிக்கப்பட்டிருந்தது .

சடலம் கண்டெடுக்கப்பட்டதையடுத்து அப்பகுதி மக்கள் கடற்படை முகாமுக்கு முன்பாக போராட்டத் தில் ஈடுபட்டனர். தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார். இதன் விளைவாக உள்ளூர் வாசிகள் கடற்படையினரின் நிர்வாக கட்டடத்தை அழித்தார்கள். இதன் எதிரொலியாக புலம்பெயர்ந்த தமிழர்கள் குழுக்களாக கூடி வெளிநாடுகளில் குறிப் பாக இங்கிலாந்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஏற் பாடு செய்து எதிர்ப்பினை வெளிப்படுத்தினர் .

UTHR போன்ற மனித உரிமைக் குழுக்கள் முத லில் அரசாங்கத்தை இழிவுபடுத்துவதற்கும் எதிர்ப்புச் சூழலை உருவாக்குவதற்கும் விடுதலைப் புலிகளின் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டி ருக்கலாம் எனத் தெரிவித்தன. UTHR இறுதியில் பாதிக்கப்பட்ட வருக்கு கடற்படை வீரர்களை முன்பே தெரியும் என்ற அறிக் கையை திரும்பப் பெற்றது.

அவரது மரணத்தைத் தொடர்ந்து, இலங்கை கடற்படை மீது பல தாக்குதல்கள் நடந்தன. இந்த தாக்குதல்களை புலிகள் நடத்தவில்லை என்று மறுத் துள்ளனர். ஆனால், பலாத்காரம் மற்றும் கொலையை அடுத்து, கிளர்ச்சியாளர் விடுதலைப் புலிகள் குழுவின் முன்னணி என்று பரவலாக நம்பப்படும் மக்கள் படை என்று தன்னை அழைத்துக் கொள்ளும் முன் னணி அமைப்பு, இலங்கை கடற்படை மீதான தாக் குதல்களுக்குப் பொறுப்பேற்றதாக, கிளர்ச்சியாளர்க ளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அறியும் பல இணைய தளங்கள் தெரிவித்தன. இந்தச் சம்பவம் 15 இறப் புகளுக்கும் மேலும் 15 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைவதற்கும் வழிவகுத்தது.

சர்வதேச மற்றும் உள்ளூர் மனித உரிமை அமைப்புகளான ACHR, Home for Human Rights மற்றும் UTHR ஆகியவை குற்றவாளிகளைக் கைது செய்ய முழுமையான விசாரணையை நடத்த வேண்டும் என்று கோரிஇருந்தன ஆனாலும் இன்று வரை அவரது கொலைக்கான முடிவும் இல்லை குற் றவாளிகளுக்கான தண்டனையும் இல்லை என் பதே பெரும் வலி .



ப்ரியமதா பயஸ்

# வாழ்க்கை என்றால் உயிர்வாழ்தல்

பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடைப்பட்ட காலமே வாழ்க்கை. ஆயினும் ஒரு சொல்லில் சொல்லிவிட வேண்டுமாயின் வாழ்க்கை என்றால் உயிர்வாழ்தல். வாழும் முயற்சி என்பது தப்பிப்பிழைத்தல் அதாவது வாழும்போராட்டம் எனவும் கருதலாம், வாழ்க்கை என்பது வரையறுத்துக்கூற முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. ஏனெனில் நாம் வாழும் இந்த வாழ்க்கை சரிவர யாராலும் புரிந்துகொள்ளப்படவில்லை வாழ்க்கை என்பது மாற்றமடையும் ஒன்றாக, நிச்சயத்தன்மையற்றதாகவே இருக்கின்றது.

உலகில் மில்லியன் கணக்கான உயிரினங்கள் வாழ்ந்தாலும் அவை தமக் கேற்றாற்போல் இந்த உலகை நுகர்கின்றன. எனவே ஒவ்வொரு உயிரினத்தின் வாழ்க்கைமுறையும் வேறுபடுகின்றது. என்னதான் வாழும் முறையில் வேறுபாடு காணப்பட்டாலும் அவை எல்லாவற்றிற்கும் பொதுவான தன்மை ஒன்றுதான். அது உயிர்வாழ்தல் என்னும் அடிப்படைத் தன்மையை பூர்த்திசெய்தல். ஒரு தன்மை உயிர்ப்புடன் இயங்க வேண்டுமானால் உயிரற்ற இன்னோர் தன்மையை சார்ந்தே இயங்கவேண்டும் இது இயற்கையின் அடிப்படை விதி. ஆகவே வாழ்க்கை என்பது உயிருள்ள உயிரற்ற தன்மைகளின் சிக்கல் நிலையாகும். இந்த சிக்கல் நிலையினை சிறப்பாக எந்த உயிரி எதிர்கொள்கின்றதோ அந்த உயிரி இவ்வுலகில் நிலைபெறுவதற்கு இயற்கை சரியான விதிகளை உருவாக்கி வைத்துள்ளது.

இயற்கையினை சார்ந்த வாழ்வே அதன் படைப்புத் தன்மையில் முழுமை பெறும். பிறப்பில் இருந்து இறப்பிற்கு, குழந்தை பருவத்தில் இருந்து முதுமைவரை உள்ள பருவ மாற்றநிலைகள் இயற்கையின் நிர்ணயத்தின் படி நிகழ்கின்றது. ஆனால் அந்தந்தப் பருவங்களில் ஆரோக்கியத்தை, வளர்ச்சியை, முன்னேற்றத்தை, வாழ்வியலை நிர்ணயிப்பது தனக்கு தானே அன்றி வேறில்லை. ஐந்தில் வளைவதுதான் ஐம்பதின் வலுவை நிர்ணயம் செய்கின்றது. அதுபோன்றுதான் யாவும் இன்றைய உழைப்பின் பயனைத்தான் பின்பு அறுவடை செய்ய முடியும். இன்றைய விதை என்ன, எத்தகையது என்பதுதான் அறுவடை காலத்தையும், அதன் பயனையும் பெற்றுத் தரும்.

# நம் பயணம் மிகவும் குறுகியது

இவ்வுலகில் நமது நேரம் மிகக் குறைவு என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும், பயனற்ற வாக்குவாதங்கள், பொறாமை, மற்றவர்களை மன்னிக்காதது, அதிருப்தி மற்றும் மோசமான அணுகுமுறைகள் ஆகியவை நம் நேரத்தையும் சக்தியையும் வீணடிக்கும் ஆபத்தானது.

யாராவது உங்கள் மனதைக் காயப்படுத்தினார் களா? அமைதியாய் இருக்கவும். நம் பயணம் மிக வும் குறுகியது.

யாராவது உங்களைக் காட்டிக்கொடுத்தார்களா, மிரட்டினார்களா, ஏமாற்றினார்களா அல்லது அவம ானப்படுத்தினார்களா? ஓய்வெடுங்கள் .

மன அழுத்தத்துக்கு ஆளாகாதீர்கள்

நம் பயணம் மிகவும் குறுகியது.

காரணம் இல்லாமல் யாராவது உங்களை அவமா னப்படுத்தினார்களா? அமைதியாய் இருக்கவும். புறக்கணிக்கவும். நம் பயணம் மிகவும் குறுகியது.

உங்களுக்குப் பிடிக்காத கருத்தை யாராவது தெரிவித்திருக்கிறார்களா? அமைதியாய் இருக்கவும். புறக்கணிக்கவும். மன்னிக்கவும், உங்கள் மனதில் அவர்களை வைத்து, எந்த காரணமும் இல்லாமல் இன்னும் அவர்களை நேசிக்கவும். நம் பயணம் மிகவும் குறுகியது.

சிலர் நமக்கு என்ன பிரச்சனைகளை கொண்டு வந்தாலும், அதை நாம் நினைத்தால் தான் பிரச்சினை, நினைவில் கொள்ளுங்கள் நாம் ஒன்றாக பயணம் செய்வது மிகவும் குறுகியதாக உள்ளது.

நம் பயணத்தின் நீளம் யாருக்கும் தெரியாது. நாளை என்பதை யாரும் பார்க்கமுடியாது. அது எப்போது நிறுத்தப்படும் என்று யாருக்கும் தெரியாது.

நாம் ஒன்றாகப் பயணம் செய்வது மிகக் குறைவு.

நண்பர்களையும்குடும்பத்தினரையும்பாராட்டுவோம். அவர்களை நல்ல நகைச்சுவையுடன் வைத்திருங்கள். அவர்களை மதிக்கவும். மரியாதையாகவும், அன்பாகவும், மன்னிப்பவராகவும் இருப்போம்.

ஏனென்றால் நாம் நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் இருப்போம், எல்லாவற்றிற்கும் மேலாக நம் பயணம் மிகவும் குறுகியது.

உங்கள் புன்னகையை அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்.... நீங்கள் விரும்பும் அளவிற்கு அழகாக இருக்க உங்கள் பாதையை தேர்ந்தெடுங்கள் உங்கள் பயணம் மிகவும் குறுகியது,





# ஆண்மைக்கான இலக்கணம்

பெண்ணின் கண்களை மட்டும் பார்த்து பேசும் கண்ணியம்.

பஸ் நெரிசலிலும் பெண்ணை உரசாமல் கடந்து செல்வது.

ஒரு பெண் தன் காதலை ஏற்கவில்லை என்றால் அவளை வற் புறுத்தாமல் விலகிச்செல்வது.

தான் காதலித்த பெண் தன்னை ஏமாற்றியே இருந்தாலும். அவளை பற்றித் தவறாக பேசாமல் இருப்பது.

யார் என்று பாராமல் உதவி செய்வது. ஆண்களுக்கு மட்டுமே உரித்தான குணம்.பிரச்சினையான சூழ்நிலையையும் அமைதியாக கையாள்வது.தன்னுடைய பொறுப்புகளை உணர்ந்து அதை ஏற்பது.

தன் மனைவியை குழந்தையை போல பார்த்துக் கொள்வது.

யார் என்ன சொன்னாலும் தன் முடிவில் தீர்க்கமாக இருப்பது.

ஒரு பெண்ணை தங்கை என்று கூறிவிட்டால். அவளை தங்கையை போலவே பார்த்து கொள்வது.தன் குடும்ப சுமையை தன் தோளில் தாங்குவது.இவை ஆண்மைகான இலக்கணம் மட்டுமல்ல. ஆண் மைக்கு அழகு கூட்டுவதும் கூட

காலைக்கதிர் Kalaikkathir

# 2021 விட்டுச் சென்றபதிவுகள்...



**ஜனவரி - 1**
சுரங்கா உதாரி என்ற பெண்மணி இலங்கையின் முதலாவது செவிப்புலனற்ற செய்தி வாசிப்பாளராகவும் முதலாவது சைகை மொழி ஊடகவியலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்.



**ஜனவரி - 8**
சேனா படைப்புழு என்ற பயிர் கொல்லி பூச்சிகளின் படையெடுப்பு அச்சுறுத்தலால் இலங்கையின் எட்டு மாவட்டங் களின் சோளம், அவரை, முள்ளங்கி மற்றும் பூசணி போன்ற பயிற்செய்கைகள் வெகுவாகப் பாதிக்கப் பட்டன.

**ஜனவரி - 10**
ரம்பாவ பிரதேச செயலகத் திற்குட்பட்ட பல கிராமங்களில் பரவிய வித்தியாசமான நோய் பசுக்களைத் தாக்கியது.



**ஜனவரி 12**
நீதி மன்றத்தை அவமதிப்புச் செய்த குற்றத்திற்காக அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்காவிற்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.



**ஜனவரி 23**
காலி மாவட்டத்தின் கட்டுக்கொட பிரதேசத்தைச் சேர்ந்த சுக்ரா முனவ்வார் என்ற 17 வயதுச் சிறுமி சிரச தொலைக்காட்சி யின் லட்சாதி பதி நிகழ்ச்சியில் ரூபா 2 மில்லியன் பணப்பரிசை வெற்றி கொண்டார்.

**ஜனவரி 28**
அவுஸ்திரேலியாவின் லோவி நிறுவனம் வெளியிட்ட உலகில் கொரோனாப் பெருந்தொற்றை வினைத்திறனாக கட்டுப் படுத்திய நாடுகளின் பட்டியலில் இலங்கை 10ம் இடத்தைப் பிடித்தது.




தொகுப்பு - ⁎ ப்ரியமதா பயஸ்
⁎ விஷ்ணு

**ஜனவரி 30**
இலங்கையில் கொரோனாப் பெருந்தொற்றால் மரணமடைந்தோரின் எண்ணிக்கை 300 ஐ எட்டியது.

**பெப்ரவரி 02**
வைத்தியர் கஜன் தந்தநாராயண கொரோனாத் தொற்றால் மரணம டைந்தார். இவர் கொரோனாத் தொற்றுக்குக் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த வேளை கொரோன வினால் மரணமடைந்த இலங்கையின் முதலாவது வைத்தியர் ஆவார்.



பெப்ரவரி 18
இலங்கை அணியின் சர்வதேச கிரிக்கட் விளையாட்டு வீரரான தமிக்க பிரசாத் தனது 8வருட கிரிக்கட் வாழ்க்கையின் ஓய்வினை அறிவித்தார்.



**ஏப்ரல் 4**
திருமதிகளுக்கான இலங்கை அழகிப் போட்டியின் போது முன்னாள் திருமதி களுக்கான உலக அழகி கரோலின் ஜுரி, வெற்றி பெற்ற புஷ்பிக டி சில் வாவின் கிரீடத்தை பறித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியது.



**ஏப்ரல் 11**
இலங்கையின் முன்னணி நீச்சல் வீரரும் ஆகாயப் படை வீரருமான ரொஷான் அபேசுந்தர நீச்சலில், ஆசிய அளவில் புதிய சாதனையொன்றைப் படைத்தார்.



**மே 20**
சிங்கப்பூருக்குச் சொந்தமான இரசாயனக் கொள்கலன் கப்பலான X - Press Pearl இலங்கையின் மேற்குக் கடல் பிரதேசத்தில் தீப்பிடித்து எரிந்து சூழலுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியது.

**ஜூன் 24**
லெபனான் நாட்டைச் சேர்ந்த இரசாயன கொள்கலன் தாங்கிக் கப்பலான மெசினா இலங்கைக்கு அருகிலான இந்து சமுத்திரத்தில் தீப் பற்றி எரிந்தது.

**மே 18**
இலங்கையின் கொரோனாத் தோற்றாளர்களின் எண்ணிக்கை 100000 ஐ அண்மித்தது.

**ஜூன் 30**
இலங்கையைச் சேர்ந்த கன்யாடி அல்மெய்டா என்ற பெண்மணி எழுதிய சிறுகதை பொதுநலவாய நாடுகள் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றது.



**ஜூலை 28**
உலகின் மிகப் பெரிய நீல இரத்தி னக்கல்லான 510 வஆ எடை கொண்ட Serendipity sapphires இலங்கையின் இரத்தினபுரி ம ாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டது.



**ஜூலை 31**
இலங்கைக்கான சர்வதேச கிரிக்கெட் வீரர் இசுறு உதான தனது சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்தான ஓய்வை அறிவித்தார்.

**ஓகஸ்ட் 23**
இலங்கைப் பாடகர்களான யொஹானி மற்றும் சதீசன் ஆகியோர் பாடிய மேனிக்கே மஹே ஹித்தே பாடல் 50 மில்லியன் பார்வையாளர்களை தாண்டிய இலங்கையின் முதலாவது பாடலாக சாதனை படைத்தது.



**செப்ரெம்பர் 03**
இலங்கையின் ரத்னபுர பிரதேசத்தை சேர்ந்த ஓஷினி டெவின்ய குணவர்தன என்ற ஒன்பது வயதுச் சிறுமி, இளையோருக்கான நிகழ்நிலை சதுரங்கப் போட்டியில் (FIDE) தங்கப் பதக்கம் வென்றார்.



**ஓகஸ்ட் 24**
முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார்.



**ஓகஸ்ட் 30**
ஜப்பான் டோக்கியோவில் இடம்பெற்ற பரா ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையைச் சேர்ந்த தினேஷ் பிரியந்த ஹேரத் ஆண் களுக்கான ஈட்டி எறிதலில் முதலிடம் பெற்றது டன் புதிய உலக சாதனையையும் நிகழ்த்தி னார். இது இலங்கை சுதந்திரமடைந்த பின் பெறப்பட்ட முதலாவது ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் தங்கப்பதக்கம் ஆகும்.

**ஒக்ரோபர் 21**
கொழும்பைச் சேர்ந்த 31 வயதான பெண்மணி ஒரே பிரசவத்தில் 3ஆண்களும் 3 பெண்களுமாக 6 குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.

**செப்ரெம்பர் 06**
இலங்கையின் புகழ் பெற்ற வெகு ஜனக் கலைஞரான சுனில் பெரேரா கொரோனாத் தொற்றால் மரணமடைந்தார்.



**ஒக்ரோபர் 09**
தாய்வானில் நடத்தப்பட்ட வடிவ மைப்பிற்கான விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர் ரூவாந்தி பவித்ரா கஜதீர முத்லிடத்தைப் பெற்றார். தெற்காசி யாவில் இவ்விருதை வென்ற முதல் நபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.





**ஒக்ரோபர் 03**
உலகத்த தலைவர்களின் சட்டவிரோத நிதி நடவடிக்கைகள் பற்றிய ஆதாரங்கள் பற்றி வெளிவந்த பண்டோரா காகிதங்களில் முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவர்களின் கணவர் திருக்குமார் நடேசன் ஆகியோரின் நிதி ஆதாரங்களும் வெளியிடப்பட்டன.

# 2021 விட்டுச் சென்றபதிவுகள்...




**ஒக்ரோபர் 21**
இலங்கைப் பங்குச்சந்தையின் அனைத்துப் பங்குகளுக்குமான விலைக்கு குறிகாட்டி வரலாற்றில் முதல் முறையாக 9800 புள்ளிகளைத் தாண்டியது

**ஒக்ரோபர் 31**
இலங்கையின் முன்னணி கடற்படை வீராங்கனையான கயந்திகா அபேரத்ன, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் 5000m, 1500m ஆகிய பிரிவுகளில் அளவில் புதிய சாதனைகளைப் பதிவு செய்தார்.



**நவம்பர் 16**
இலங்கைப் பொலிஸ் தலைமையகத்தின் முதலாவது பெண் பணிப்பாளராக ரஞ்சினி அமரசேன தெரிவு செய்யப்பட்டார்.



**நவம்பர் 17**
இலங்கையின் மூத்த பாரம்பரிய நடனக் கலை ஞான கலாநிதி. வஜிர சித்திரசேன அவர்கள் இந் திய அரசாசங்கத்தினால் 2020ஆம் ஆண்டுக்கான பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



**ஒக்ரோபர் 28**
பேராசிரியர் நீலிக மாளவிகே உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொரோனாப் பிரிவின் தொழிநுட்ப ஆலோசக சபையின் அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டார்.



**நவம்பர் 21**
இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் ரஞ்சன் மடுகல்லே 200 போட்டிகளை மத்தியஸ்தம் செய்த முதலாவது நடுவராக தெரிவு செய்யப்பட்டார்.



**நவம்பர் 24**
பெலியகொட பிரதேசத்தில் புதிதாகக் நிர் மாணம் செய்யப்பட்ட களனி ஆற்றுப் பாலம் Golden Gate Of kalani என்ற பெயரில் புதிதாக திறந்து வைக்கப்பட்டது.



**நவம்பர் 25**
இலங்கை பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க இலங்கைக்கான அமெரிக்கா மற்றும் மெக் ஸிகோ நாட்டுத் தூதுவராக தெரிவு செய்யப் பட்டதன் காரணமாக தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.





**நவம்பர் 29**
முன்னாள் அமைச்சரும் கிரிக்கெட் விளை யாட்டு வீரருமான அர்ஜுன ரணதுங்க தனது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.

**டிசெம்பர் 15**
இலங்கையின் பாரம்பரிய கைவினைத்தி றன்களில் ஒன்றான தும்பற ரட்ட காலால (தும்பற நெசவு) UNESCO வின் பாரம்பரிய புனிதச் சின்னங்களில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டது.




**டிசெம்பர் 09**
உஸ்பெகிஸ்தான் நாட்டின் தலை நகரான தாஷ்ஹெந்தில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை வீரர் ஸ்ரீமல்லி சமரக்கோன் தங்கப் பதக்கம் வென்றார்.

**டிசெம்பர் 29**
இலங்கையின் சர்வதேச விளையாட்டு வீரரான ஜீவன் மெண்டிஸ் தனது சர்வதேசப் போட்டிகளி லிருந்தான தனது ஓய்வினை அறிவித்தார்.



# எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய ஒன்றுகூடல்











திருகோணமலை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் படைப்பாளிகள் ஒன்று கூடலானது கடந்த 26 ஆம் திகதி திருகோணமலையில் கவிஞரும் ,சமூக சேவகருமான க.தீபகாந்தன் தலைமையில் இடம்பெற்றது

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக காலைக்கதிர் பத்திரிகையின் பொது முகாமை யாளர் சி.யதுராஜ் மற்றும் காலைக்கதிர் பத்திரிகை ஆசிரியர் பீடத்திலிருந்து ப்ரியமதா பயஸ் ஆகியோரும் மூத்த படைப்பாளிகள் திருமலை சுந்தா, 'நீங்களும் எழுதலாம்' இதழாசிரியர் தனபாலசிங்கம், கவிஞர் ஷெல்லிதாசன் ஆகியோருடன் கிழக்கு மாகாணத்தின் வளர்ந்து வரும் பல எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர்.

# திருமலை செல்வஜோதி பிரணவஜோதிக்கு 'தேச கீர்த்தி' மற்றும் 'சமூக ஜோதி' விருது



இலங்கை முதலுதவி சங்கத்தின் 46 வது வருட பூர்த்தியை முன்னிட்டு 2021 ஆம் ஆண்டுக்கான வாழும்போதே வாழ்த் துதல் விருது வழங்கும் நிகழ்வு டிசம்பர் 28 ஆம் திகதி இடம் பெற்றது.

இலங்கை முதலுதவி சங்கத்தின் தேசிய ஆணையாளர் சிவத்திரு வை.மோகன தாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த விருது வழங்கும் நிகழ்வில் சிவகுரு ஆதீன குரு முதல்வர் வேலன் சுவாமிகள் கலந்துகொண்டார்.


இதில் தேசகீர்த்தி, சமூக ஜோதி, மக் கள் திலகம், ஆகிய விருதுகள் 60 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் சிறப்பாக செயலாற்றிய 40 இலங்கை முதலுதவி சங்க தொண்டர்களும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த விருதுவழங்கலில் திருகோண மலையை சேர்ந்த சமூக சேவகரும் கலை இலக்கிய ஆர்வலருமான செல்வஜோதி பிரணவஜோதி சமூக சேவை மற்றும் முத லுதவி சேவைக்காகவும் தேச கீர்த்தி மற் றும் சமூக ஜோதி ஆகிய விருதுகளை பெற்றுள்ளார்.

# தென்னைகளுக்கிடையிலான ஊடுபயிராக "கமுகு செய்கை" எனும் நூல் வெளியீடு

ஜெ.சத்தியேந்திரன் - ஓய்வுநிலை உத விப்பிராந்திய முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கை சபை,யாழ்ப்பாணம் - அவர்களின் தென்னைகளுக்கிடையி லான ஊடுபயிராக "கமுகு செய்கை" எனும் நூல் வெளியீட்டு விழா, கடந்த 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள திவ்ய ஜீவன மண்டபத்தில் நடைபெற் றது.

நிகழ்வில் மிரிகம சில்வா மில் உதவி முகாமையாளர் பிரியால் தினேஷ் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார் .



நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டதோடு ,இந்த நூலின் தற்போ தைய முக்கியத்துவம் குறித்தும் நன்றி களை தெரிவித்தனர் .

# நானும் சொல்கிறேனே...!

இந்த வாரத் தலைப்பு
## உறவுகள் தரும் உறுதி

நானும் சொல்கிறேனே.....!
காலைக்கதிர் வாரஇதழ்
Address - No.551 A, Kasthuriyar Road, Jaffna
மின்னஞ்சல் - kalaikkathirweekly@gmail.com
Whatsapp & Viber - 076 443 8622
சமூகவலைத்தளங்கள் - kalaikkathir
(காலைக்கதிர்)

# சென்றவாரத் தலைப்பு சினிமாக்களைச் சீரழிப்பவை இவைதான்!

05

தமிழ் சினிமாக்களைப் பொறுத்தவரை, அவை பல்வேறு கலையம்சங்களைக் கொண்ட ஒரு கலவைகளாகத்தான் உருவாக்கப்படுகின்றன. பாடல்கள், சண்டைகள், நகைச்சுவைகள், காதல் காட்சிகள், சோகம், பாசம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் என்று தமிழ் சினிமாக்கள் கட்டமைக்கப்படுகின்றன.

இவ்வாறு கட்டமைக்கப்படும் சினிமாப்படங்களில் இந்த அம்சங்களில் பல, வர்த்தக நோக்கம் என்ற பெயரில் திணிக்கப்படுகின்றன. அவ்வாறு திணிக்கப்படும் விடயங்களே சினிமாக்களைச் சீரழிக்கின்றன.

இயல்பான கதையோட்டத்தில் தேவைப்படுபவற்றை மட்டுமே சேர்த்துக்கொண்ட படைப்புகள் இரசனைக்குரியவையாகவும் இருக்கின்றன. அப்படியான படங்களில் கூட சில நேரங்களில் தனியான நகைச்சுவை ட்ராக்குகள் எனப்படும் காட்சிகளை இணைக்கச் சொல்லி தயாரிப்புத் தரப்பு பிடிவாதம் பிடித்ததாகவும் அதனால், அவற்றை புகுத்தியிருப்பதாகவும் வேதனைப்பட்ட இயக்குநர்களது பேட்டிகளையும் பார்த்திருக்கிறேன்.

**- சு.தாட்சாயணி, மன்னார். -**

சில வேற்று மொழிப் படங்களைப் பார்க்கும்போது, இப்படிப்பட்ட திரைப்படங்களை தமிழில் எப்போது எடுப்பார் கள்? என்ற கேள்வி எழும். அவ்வப்போது அப்படியான முயற்சிகள் நடந்திருக்கின்றன. என்றாலும், அவற்றிலும் ஏதோ ஒரு வகையிலான செயற்கைத் தன்மை வந்து முழுப் படத்தையுமே கெடுத்து விடும்.

இப்போது ஓ.டி.டி. எனும் சற்றே சுதந்திரமான தளங்கள் திரைத் தயாரிப்பாளர்களுக்கும் இயக்குநர்களுக்கும் கிடைத்திருக்கின்றன. ஆனால், அவற்றைக் கூட குப்பை கொட்டுமிடமாகப் பலரும்பயன்படுத்துவதுவேதனை தருகிறது.

**- ஜே.ரூபன், கொழும்புத்துறை.-**

**கடந்த வாரம் நாம் கொடுத்திருந்த தலைப்பு - சினிமாக்களைச் சீரழிப்பவை இவைதான்!**

**இந்தத் தலைப்பில் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களது பதிவுகள் இவை!**

**இவற்றில் த.பார்த்திபனின் பதிவு பரிசுக்குரியதாகத் தேர்வாகி ரூபா.500 பணப்பரிசினைப் பெறுகிறது!**

இவற்றைத்தான் மக்கள் ரசிக்கிறார்கள், என்ற போர்வையில் வலிந்து நுழைக்கப்படும் விடயங்கள் இருக்கின்றனவே – அவைதான் சினிமாக்களைச் சீரழிக்கின்றன. முக்கியமாக தமிழ் சினிமாக்களில், இந்த அவசியமற்ற புகுத்தல்கள் எக்கச்சக்கம்! எரிச்சல் வந்து எழுந்து ஓடிப் போகுமளவுக்கு இவற்றின் மசாலாத் தன்மை அதிகம்.

பீசா, பேர்கர், ப்ரை சிக்கன் போன்ற உணவுகளை எப்போதாவது சாப்பிட்டுப் பார்க்கலாம்தான். எப்பவுமே அதைத்தான் சாப்பிட வேண்டுமென்ற நிலை வந்தால்? அதைவிடக் கொடுமை வேறு இருக்கமுடியாதல்லவா?

அப்படியாகத்தான் தமிழ் திரைப்பட உலகமும், எங்களுக்கு ஒவ்வாத படைப்புகளை, இரசிகர்கள் விரும்புகிறார்கள் – என்ற பெயரில் எம்மீது அள்ளிக் கொட்டிக்கொண்டிருக்கின்றன. இவர்கள் மலையாளத் திரையுலகப் படைப்புகளையாவது பார்த்துத் திருந்தவேண்டும்!

**- த.பார்த்திபன், வட்டுக்கோட்டை -**

கடந்த வாரத்துக்கு முன்னைய வாரத்தில் நாம் வழங்கியிருந்த, குழந்தைகள் எப்படி எம்மை வளப்படுத்துகிறார்கள் தெரியுமா? - என்ற தலைப்பில் தங்களது எண்ணங்களை எழுதித் தெரிவானவர்களில் சிலரது ஆக்கங்கள் கடந்தவாரம் பிரசுரமாகியிருக்கவில்லை. அவற்றையும் இந்த வாரத்தில் இணைத்திருக்கிறோம்.

குழந்தைகளை நாம் வளர்க்கிறோம் வளப்படுத்துகின்றோம் என்றே நாம் கருதிக்கொண்டிருக்கிறோம். அது ஓரளவு உண்மையே! ஆனாலும் அவர்களாலும் நாம் பல புதிய விடயங்களைக் கற்றுக்கொள்கிறோம். சட்டென்று பொட்டில் ஆணியறைந்தது போல் பல விடயங்களைப் புரியவைத்துக் கடந்து போவார்கள் இந்தப் பிஞ்சுக் குழந்தைகள்.

என் அண்ணன் மகள் ஆதவி அப்போது இரண்டாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தாள். அவள் தினமும் என் அண்ணாவின் துவிச்சக்கர வண்டியில்தான் பாடசாலை சென்று வருவாள். அச்சமயம் தற்காலிக வேலையிலிருந்த என் அண்ணா, அரச வேலையில் சேர்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தன்னைத் தயார் படுத்திக்கொண்டிருந்தார். ஆனாலும் அதிகளவு சிரத்தையுடன் அவரால் அதில் கவனம் செலுத்த முடியவில்லை.

ஆனால், ஆதவியோ மிகவும் சுட்டி, தினமும் பாடசாலை சென்று வரும்போது அண்ணவிடம் நிறையக் கேள்விகள் கேட்பாள். அவை, பொது அறிவு விஞ்ஞானம் என பல பரப்புகளைத் தொட்டுச் செல்லும். ஏன்? எப்படி? என்பதான குழந்தையின் கோணத்திலிருந்தான வினாக்கள். அதற்குப் பதில் கூறும் பொருட்டு நிறைய விடயங்களை இணையத்தினூடாக தேடிக்கற்கத் தொடங்கினார் என் அண்ணா. அவள் பாடசாலை செல்லும் போது கேட்ட கேள்விக்கு மதியம் அழைத்து வரும்போது பதில், விளக்கம் சொல்லித் திருப்திப்படுத்திக் கூட்டிவருவார்.

அவளால் பற்பல விடயப் பரப்புகளையும் புதிய விடயங்களையும் கற்றுக் கொண்டார். அவளும் கற்றுக் கொண்டேயிருந்தாள். அந்த நல் உரையாடல் மூலமான கற்றலால் அவள் வகுப்பில் புத்திசாலியாகத் திகழ்ந்தாள். எனினும், அவள் கேள்விகளுக்குப் பதில் அளிக்க அவர் கற்ற விடயங்கள், அண்ணா சந்தித்த போட்டிப் பரீட்சையை வெற்றிகொள்ள வைத்தது. அவர் ஒரு முகாமைத்துவ உதவியாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இன்று அவரும் ஆதவியும் உந்துருளியில் பாடசாலை செல்கிறார்கள். அவள் இன்னுமின்னும் கேள்வி கேட்டுக்கொண்டேயிருக்கிறாள். இப்போது நானும் அண்ணாவுடன் சேர்ந்து அவளுக்குப் பதில் சொல்கிறேன். இல்லை, இல்லை; நம் அறிவை வளப்படுத்திக்கொண்டிருக்கிறோம், எனச்சொல்வதே சாலச் சிறந்தது!

**- விஷ்ணுப்பிரியா ஸ்ரீகாந்தன் -**

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir
நானும் சொல்கிறேனே.....!



இந்த வாரத்துக்கான தலைப்பு
உறவுகள் தரும் உறுதி
நானும் சொல்கிறேனே.....!
காலைக்கதிர் வாரஇதழ்
Address - No.551 A, Kasthuriyar Road, Jaffna
மின்னஞ்சல் - kalaikkathirweekly@gmail.com
Whatsapp & Viber - 076 443 8622
சமூகவலைத்தளங்கள் - kalaikkathir
(காலைக்கதிர்)

# திருகோணமலை பொது வைத்தியசாலை இடமாறும் இடத்தை பார்வையிட்ட ஆளுநர்



திருகோணமலை பொது வைத்தியசாலையை இடம் மாற்றம் செய்ய அரசாங்கம் தீர்மானித்ததையடுத்து பொருத்தமான இடமொன்றைத் தெரிவுசெய்வதற்கான கள ஆய்வை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டுள்ளனர்.

சர்தாபுரா பகுதியில் புதிய வைத்தியசாலை கட்டு வதற்கு ஏற்றது என சுகாதார அமைச்சால் பரிந்துரைக் கப்பட்டதையடுத்தே திருகோணமலை சர்தாபுர பகுதி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. திருகோணமலை, சர்தாபுர பகுதியில் நவீன வசதிகளுடன் அமைப்பதற்காக ஐம்பது ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐம்பது ஏக்கர் காணிக்கான சகல ஆவணங்களும் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் விரைவில் கைய ளிக்கப்படவுள்ளன. இதற்கான பணிப்புரையை கிழக்கு மாகாண ஆளுநர் விடுத்துள்ளார். இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத், நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள, திருகோணமலை மாவட்ட செய லாளர் சமன் தர்ன பாண்டிக்கோரல, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் திருகோணமலை வைத்தியசாலையின் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# புதுவருட தினத்தை முன்னிட்டு கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட ஆராதனைகள்!






புதுவருட தினத்தை முன்னிட்டு கிறிஸ்தவ தேவாலயங்களில் நாடளாவிய ரீதியில் விசேட ஆராதனைகள் இடம்பெற்;றன.

இதன்போது விசேட திருப்பலி பூஜைகள் இடம்பெற்று திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புதுவருடத்தை வரவேற்கும் சிறப்பு ஆராதனைகள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**மன்னார்**

மன்னார் மறை மாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் வெள்ளிக்கிழமை இரவு 11.45 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருகள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். மேலும் மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் போது ஆலயத்துக்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பை வழங்கியுள்ளனர்.

புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியின் போது ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக கடந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**வவுனியா**

புதுவருட தினத்தை முன்னிட்டு வவுனியாவில் கிறிஸ்தவ தேவாலயங்களில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அமைதியான முறையில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

வவுனியாவின் பிரதான கிறிஸ்தவ தேவாலயமான இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆலய பங்குதந்தை தலைமையில் காலை விசேட திருப்பலி பூஜைகள் இடம்பெற்று திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புதுவருடத்தை வரவேற்று சிறப்பு ஆராதனைகள் இடம்பெற்றன.

இதன்போது வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்த கிறிஸ்தவ மக்கள் விசேட ஆராதனைகளில் கலந்துகொண்டதுடன், புதுவருட வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

இதன்போது, தேவாலயத்தின் பாதுகாப்பு கடமையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மலேரியா நோய் தொற்று பரவல் தொடர்பாக வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை



இலங்கையை மலேரியா அற்ற நாடாக தொடர்ந்தும் பேணுவதற்கான முற்காப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கை 2016 ஆம் ஆண்டு முதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார நிறுவனத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மலேரியாத் தொற்று பரவவில்லை. எனினும் கடந்த ஆண்டுகளில் மலேரியா பரம்பல் அதிகமாகக் காணப்படும் இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் போன்ற வேறு நாடுகளில் இருந்துவரும் பயணிகளில் மலேரியாத் தொற்றுடன் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். இது மலேரியா அற்ற நாடாக எமது நாட்டை பேணுவதில் நாம் எதிர் நோக்கும் மிகப்பெரிய சவாலாகும்.

கடந்த சிலவாரங்களில் மலேரியா தொற்றுடன் இருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்களாவர்.

மலேரியாவை பரப்பும் அனோபிலிஸ் வகை நுளம்புகள் பெருமளவாக எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன. மேலும் அண்மைக்காலங்களாக நகர்ப்புற மலேரியாவை பரப்பக் கூடிய அனோபிலிஸ் ஸ்டெபென்சி வகை நுளம்புகளும் எமது பிரேதேசங்களில் காணப்படுகின்றன என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மலேரியா நோயை ஏற்படுத்தும் பிளாஸ்மோடியம் வகை ஒட்டுண்ணிகளை மனித உடலிலிருந்தும் அதை காவிப்பரப்பும் நுளம்புகளில் இருந்தும் ஒழித்ததன் மூலமே மலேரியா அற்ற நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

எனவே காவிகள் பெருமளவாக காணப்படும் எமது பிரதேசத்தில் மலேரியா நோய்க்கான ஒட்டுண்ணியுடன் ஒருவர் இருந்தாலே அந்த இடத்தில் மலேரியா மீண்டும் விரைவாக பரவும் அபாயம் உள்ளது.

எனவே மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற நாடுகளுக்கு செல்பவர்கள் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதைத் தடுக்கலாம்.

ஆபிரிக்க நாடுகள் மற்றும் இந்தியா செல்ல இருப்பவர்கள் மலேரியா நோயில் இருந்து தம்மை காத்துக் கொள்வதற்காக தமது பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகரைத் தொடர்பு கொள்வதன் மூலம், அருகில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதார கிராமம், பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்கப் பணிமனையிலோ (தொ.பே.இல 021 - 222 7924) தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இவர்கள் மலேரியா பரம்பல் அதிகமாகக் காணப்படும் நாடுகளில் தங்கி இருக்கும் காலப்பகுதியில் வாரத்துக்கு ஒருமுறை மட்டும் தடுப்பு மருந்துகளை தொடர்ந்து உள்ளெடுப்பதோடு பயணம் நிறைவுற்று நாடு திரும்பிய பின்பும் நான்கு வாரங்கள் நிறைவுறும் வரை வாரத்துக்கு ஒருமுறை தடுப்புமருந்துகளைத் தொடர்ந்து எடுக்கவேண்டும்.

அவ்வாறே ஒருவருடத்துக்குள் காய்ச்சல் ஏற்படின் உங்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று தங்கள் பயணம் தொடர்பான விவரங்களை வைத்தியருக்கு வழங்குவதுடன் மலேரியா நோய்க்காக குருதியைப் பரிசோதித்துக்கொள்ள வேண்டும்.

மேலும், இவ்வாறான பயணங்களை மேற்கொள்ளும் யாராவது குருதிக்கொடையாளர்களாக இருந்தால் மூன்று வருடங்களுக்கு குருதிக்கொடை வழங்க முடியாது.

உங்களில் அல்லது தெரிந்தவர்களில் யாராவது ஆபிரிக்க நாடுகள், பாகிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், மலேசியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், சவூதி அரேபியா, தாய்லாந்து, வியட்நாம், திமோர் - எஸ்ரே பேன்ற நாடுகளுக்கு சென்று வந்திருப்பின் அல்லது அங்கிருந்து திரும்பியிருப்பின், அருகில் உள்ள வைத்தியசாலைகள் ஏதேனும் ஒன்றில் அல்லது சுகாதார அதிகாரி காரியாலயத்தை அணுகி மலேரியா நோய்க்கான குருதிப் பரிசோதனையைப் செய்துகொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். இலங்கையை மலேரியா அற்ற நாடாகத் தொடர்ந்தும் பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைப்போம். - என்றுள்ளது.

# மன்னார் மடு பகுதியில் குடைசாய்ந்தது ஓட்டோ



மன்னார் மடு பகுதியில் ஓமடமோ குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னார் - மதவாச்சி வீதியூடாக ஓட்டோ சென்று கொண்டிருந்த சமயத்தில் மடு பகுதியை அண்மித்த பகுதியில் ஓட்டோவின் எதிர்திசையில் வந்த டிப்பர் வாகனம் முந்திச்செல்ல முற்பட்டது.

இதன் போது ஓட்டோஈ சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு கீழிறங்கி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஓட்டோவின் சாரதி உட்பட இருவர் காயமடைந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 2 ஆயிரத்து 200 கோடி ரூபாவை அச்சிட தயாராகின்றது இலங்கை மத்திய வங்கி!

இலங்கை மத்திய வங்கி 2 ஆயிரத்து 200 கோடி ரூபாவை அச்சிடுவதற்கு தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒக்ரோபர் 14 ஆம் திகதியின் பின்னர் பணம் அச்சிடப்படவுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த ஆண்டில் இதுவரையில் 8 ஆயிரத்து 250 கோடி; ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, 48.5 பில்லியன் ரூபா பெறுமதியான பிணைமுறிகளையும் அரசாங்கம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் 33.5 பில்லியன் ரூபா விற்பனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 14 எண்ணெய் குதங்களை மேலும் 50 வருடங்களுக்கு இந்தியாவிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானம்

திருகோணமலையில் தற்போது லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் 14 எண்ணெய் குதங்கள் மேலும் 50 வருடங்களுக்கு அதே நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்படுமென எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மீதமுள்ள 61 எண்ணெய் குதங்கள் திருகோணமலை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் கூட்டாக நிர்வகிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அதில் சி.பி.சி. 51 வீத பங்குகளையும், எல்.ஐ.பியூ.சி. 49 வீத பங்குகளையும் கொண்டிருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, 24 எண்ணெய் குதங்கள் சி.பீ.சி.யின் கீழ் பராமரிக்கப்படும் என அமைச்சர் கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# ஐந்து திருத்தந்தையர்களைச் சந்திக்கும் அபூர்வ அனுபவம் பெற்ற மூத்த குரு கலாநிதி எஸ்.ஜே.இம்மனுவேல் அடிகளார்

**ஐந்து திருத்தந்தையர்களைச் சந்திக்கும் அபூர்வ அனுபவம் பெற்றவர் கலாநிதி எஸ்.ஜே. இம்மனுவேல் அடிகள். இவர் (01) திருத்தந்தை 23ஆம் அருளப்பர் (02) திருத்தந்தை 6ஆவது சின்னப்பர் (03) திருத்தந்தை முதலாவது அருளப்பர் சின்னப்பர் (04) திருத்தந்தை புனிதர் 2ஆவது அருளபப்ர் சின்னப்பர் ஆகிய திருத்தந்தையர்களைச் சந்தித்துள்ளார்.**

**உண்மையில் இது இவருக்குக் கிடைத்த விசேட வரம் எனறே கருத வேண்டும். இவ்வாறு வேறு யாரும் ஐந்து திருத்தந்தையர்களைச் சந்தித்திருக்க முடியாது என்றே அறிந்தவரை எண்ணுகிறேன். எனவே அவரின் அந்தச் சந்திப்பு அனுபவங்களை காலைக்கதிர் தினசரி மற்றும் ஒன் லைன் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களுக்காக அவரைச் சந்தித்து அவரின் அந்த அபூர்வ உணர்வுபூர்வ அனுபவங்களைப் பகிர்கிறேன்.**



**- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் - (ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம். ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர்- யாழ் பல்கலைக்கழகம்; இயக்குனர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)**

கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளாரைப்பற்றி..

தனது 87ஆவது அகவையில் ( பிறப்பு:1934) கால் பதித்து, 54 ஆண்டுகள் (குருத்துவம்:1966) குருத்துவப் பணியாற்றியுள்ள கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் மூத்த குருவானவர்.

ஆசிய இறையியலாளராக மதிக்கப்படும் கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளரா் எட்டு ஆண்டுகள் (1986 - 1994) ஆசிய ஆயர்கள் பேரவையின் இறையியல் ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார். 10 ஆண்டுகள் (1986 - 1996) யாழ் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அதிபராகவும், இறையியல் விரிவுரையாளராகவும், யாழ் மறைமாவட்டத்தின் குருமுதல்வராகவும் பணியாற்றியுள்ளார்.

ஐந்து திருத்தந்தையர்களைச் சந்தித்த அந்த அபூர்வ அனுபவத்தை இதோ பகிர்கிறார் கலாநிதி எஸ்.ஜே.இம்மனுவேல் அடிகள்:-

முன்னாள் யாழ்ப்பாணம் ஆயர் ஜெறோம் எமிலியானுஸபிள்ளை என்னை 1962ஆம் ஆண்டு புரட்டாசியில் கப்பல் மூலம் உரோமை பல்கலைக் கழகத்திற்கு மெய்யியல், இறையியல் குருத்துவ ஆயத்தப் படிப்புகளுக்காக அனுப்பினார். 28 வயது இளமைத் துடிப்பில் 13 நாள்கள் பயணத்தின் போது கப்பல் செங்கடலூடாக செல்லும் பொழுது ஆஸ்திரேலிய குரு மாணவர்களுடன் சோந்து நைல் செங்கடல் தெருவில் கைறோ எகிப்திய தலைநகரம் மட்டும் உல்லாசப் பயணம் செய்தேன். கெய்றோவில் ஒட்டகம் மேல் ஏறி சவாரி சென்றேன்.

13 நாள்களின் பின் இத்தாலியின் நேப்பில்ஸ் நகரை அடைந்தோம். கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் தோமஸ் கூறே ஆண்டகை என்னை ரயில் வழியாக உரோமைக்கு அனுப்பி விட்டார். உரோமை நகர ரயில் நிலையத்திற்கு அடைந்ததும் தொலைபேசியில் ஊர்பானியா பல்கலைக் கழகத்தில் யாழ்ப்பாணம்



மறைமாவட்டத்தை சோந்த பொனாண்டோபிள்ளையை (நீர்கொழும்பு) அழைத்தேன். அவர் பஸ்ஸில் வந்து என்னைக் கூட்டிச் சென்றார்.

**01. திருத்தந்தை 23ஆம் அருளப்பர்**

சில நாள்கள் கழிந்த பின்னர் திருத்தந்தை 23ஆம் அருளப்பர் தனது பிறந்த தினத்தன்று எங்களுடைய கல்லூரிக் கோவிலுக்கு வந்தார். நான் ஒரு புதிய மாணவனாக முதல் வரிசையில் இருந்து திருத்தந்தையை அவதானித்தேன். அவரின் பேச்சு இத்தாலிய மொழியில் எனக்கு விளங்கவில்லை. ஐப்பசி 11 ஆம் திகதி அவரே 2ஆம் வத்திக்கான் சங்கத்தை 2000 மேற்பட்ட ஆயர்களுடன் திறந்து வைத்தார். அதன் பினனர் பல கொண்டாட்டங்களில் அவரைக் கண்டு இரசித்தேன்.

**02. திருத்தந்தை 6 ஆவது சின்னப்பர்**

திருத்தந்தையின் கோடை கால இல்லமும் எங்களது இல்லமும் கார்சல் கண்டொல்போவில் அக்கம் பக்கமாக இருந்தன. ஒவ்வொரு ஆண்டும் ஒகஸ்ட் 15ஆம் திகதி சாயந்தரம் திருத்தந்தை எங்களை வந்து சந்திப்பார். நாங்கள் மாணவர்கள் பல்வேறு நாட்டுப் பாடல்களை பாடி அவரை மகிழ்விப்போம். 1966 ஆவணி 15 காலை நான் உபதியாக்கோன் பட்டம் பெற்றேன். அன்று மாலை நான் திருத்தந்தை 6ஆவது சின்னப்பரிடமிருந்து புதிய ஏற்பாட்டு புத்தகத்தை பெற்றுக் கொண்டேன்.

**03. திருத்தந்தை முதலாவது அருளப்பர் சின்னப்பர்**

1978 இல் கருதினால் அல்பீனோ லுசியானோ புன்சிரிப்புடைய திருத்தந்தையாக முதலாம் அருளப்பர் சின்னப்பர் என்ற பெயரில் திருத்தந்தை 6ஆவது சின்னப்பரை தொடர்ந்தார்.

1978 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் உரோமையில் நடக்கும் புதன்கிழமை சாதாரண சந்திப்பில் நானும் பங்கெடுத்தேன். புதிய திருத்தந்தையின் நினைவு படங்களுடன் இலங்கை திரும்பினேன். சடுதியாக 28 ஒக்ரேபர் 1978இல் திருத்தந்தை 31 நாட்களுக்குப் பின் ஏதோ சதியினால் இறந்து விட்டார்.

**04. திருத்தந்தை 2ஆவது அருளப்பர் சின்னப்பர்**

1973 - 1976 ஆண்டு காலப்பகுதியில் நான் உரோமையில் எனது ஆய்வுப் படிப்புகளை செய்து கொண்டிருந்த பொழுது ஆயர் தீயோகுபிள்ளையும் சுவாமி கருணாகரனும் உரோமை வந்திருந்தனர். முந்திய நாள் ஜேர்மனி முன்சனில் கத்தோலிக்க தினத்தில் பங்குபற்றி விட்டு காலை விமான மூலம் உரோமை வந்தடைந்தேன். திருத்தந்தையுடன் ஆயர் தீயோகுபிள்ளை சந்திப்பென்று அறிந்ததும் நானும் இணைந்து கொண்டேன்.

எனது முதல் வார்த்தைகள் ஜேர்மன் மொழியில் நான் கருதினால றட்சிங்கரை முன்சனில் கண்டேன் எனக் கூறினேன். அவரும் ஜேர்மன் மொழியில் என்னோடு கதைத்தார்.

**திருத்தந்தை பிரான்சீஸ் உடன் மிக மகிழ்ச்சியான சந்திப்பு**

திருத்தந்தை பிரான்சீஸ் தோந்தெடுக்க பட்ட பொழுது மகிழ்ந்தேன. ஏனெனில் நான் இறையியலாளராக தென் அமெரிக்க திரு அவைகளின் துணிவான தலைவர்களையிட்டு மகிழ்ந்தேன். நான் எதிர்பார்த்தது போல் அவர் தெரிந்து கொண்ட பெயர் ஒரு வாழ்க்கை திட்டம்.

இயேசு சபை குருக்களின் தலைவராக மக்களின் அனுபவங்களை அறிந்து மதித்து நடந்தவர். உலக திரு அவையின் தலைவராக புனித அசீசி பிரான்சீசின் வாழ்க்கையால் கவரப்பட்டவர். நிச்சயமாக எமது திரு அவைக்கும் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வருவரா் என எதிர்பார்த்தேன். ஏமாற்றம் அடையவில்லை.

2ஆம் வத்திக்கான் சங்கம் முடிந்நதும் 40 ஆயர்கள் - அவர்களில் அனேகர் தென் அமெரிக்காவை சோந்தவர்கள் - உரோமையில் டொமில்டா கற்றகூமில் கூடி தங்களது மறைமாவட்டங்களில் வறுமையில் வாடும் மக்களுடன் சோந்து வாழ்வதென்ற ஒரு ஒப்பந்தம் செய்தனர். அந்த ஒப்பந்தத்தை நினைவு கூர்ந்து 2015ஆம் ஆண்டில் உரோமையில் கூடினர். அதற்கு 300க்கு மேற்பட்ட ஜேர்மன் கத்தோலிக்கர் உரோமைக்கு திருயாத்திரையாக சென்றனர். 2ஆம் வத்திக்கான் சங்கத்தை நேரில்



காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

அனுபவித்த ஆசிய இறையியலாளர் என்ற அடிப்படையில் என்னையும் உரோமையில் 40 ஆயர்கள் செய்த ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை விளக்கி உரையாற்றும்படி அழைத்தனர். அந்த யாத்திரையின் முடிவிலே திருத் தந்தை பிரான்சீசை முதன் முறையாக சந்தித்தேன். அவருடன் பேச வாய்ப்பிருக்கவில்லை.

ஆனால் 2016இல் எனது குருத்துவ பொன்விழா. குருக்களாக 16 டிசெம்பர் 1966இல் கருதினால் அகஞானியன் ஆண்டகையால் சம் பேதுரு பேராலயத்தில் 55 போ குருப்பட்டம் பெற்றோம். அதில் ஒருவர் ஆஸ்துரேலிய கருதினால் ஜோர்ஜ் பெல். அவர் வத்திக்கானில் நிதித் துறைக்கு பொறுப்பாக இருந்தவர்.

எமது பொன்விழா திருப்பலியை திருத்தந்தை பிரான்சீசின் தலைமையில் கூட்டுப் பலியாக புனித மார்த்தா சிற்றாலயத்தில் கொண்டாட ஒழுங்கு செய்தார். அப்படியே உரோமையில் கூடிய 10 குருக்களும் திருப்பலி விருந்து கொண்டாடிய பின் திருத்தந்தையை கூட்டாகவும் தனித் தனி நேராகவும் சந்தித்து உயைாடினோம். அதன் பின் காலை உணவில் பங்கெடுத்தோம். நான் நேராக திருத் தந்தையை சந்திப்பதற்கு ஆயத்தமாக இத்தாலிய மொழியில் 2 பக்கங்கள் அடங்கிய கடிதத்தை தயாரித்திருந்தேன். அதில் எனது குருத்துவ வாழ்வில் தமிழ் திரு அவையிலும் இலங்கை தீவிலும் ஆசிய திரு அவைகளிலும் செய்த பணிகளை சுருக்கமாக கூறி அவர் இன நல்லிணக்கத் திற்காக மடு திருப்பதிக்கு சென்றதிற்கு நன்றி கூறினேன். அவர் எல்லாவற்றையும் ஆர்வத்துடன் கேட்டு எனது கடிதத்தையும் எடுத்த பின்பு நீரும் நாட்டிற்கு திரும்பி நல்லிணக்க பணியை தொடரும் படி கூறினார். - என்றார்

# Arunthathee பிரம்மாண்டமான மாற்று மோதிரம் மணப்பெண் கண்காட்சி கொழும்பில்...!




அரிது அரிது மானிடராய் பிறப்பதரிது என்பது ஔவை சொல். ஆனால் அதிலும் அரிது என்ன தெரியுமா? இந்த காலத்தில் ஒரு நல்ல வாழ்க்கைத்துணையை தேர்ந்தெடுப்பதுதான். இந்த வாழ்க்கை அனைவருக்கும் ஒரு முறைதான் என்றால் அவ் வாழ்க்கையில் நம் மோடு இணையப்போகும் வாழ்க்கைத்துணை எவ்வாறிருக்கவேண்டும் என்ற கற்பனைகள் கொஞ்சம் அதிகம் தான். வாழ்வோடு இணைந்து பயணிக்கும் வாழ்க்கைத் துணையாக வரும் எதிர்பாலினம் சிறப்பாக அமைந்துவிட்டால் நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு தருணமும் சிறப்பானதே.

அப்படிப்பட்ட வாழ்க்கைத் துணையை அமைத்து கொடுத்து பலரின் வாழ்க்கையை அழகான தருணங்களாக மாற்றி பல வருடங்கள் கடந்தும் மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று தம் சேவையை பரந்துபட்டளவில் வியாபித்து வருகிறது அருந்ததி இணைய திருமண சேவை. 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போது வரை அதன் சேவை பல வாடிக்கையாளர்களின் நல் வாழ்க்கைக்கு வழியமைத்துள்ளது.

திருமணமென்பது அனைவரினதும் வாழ்க்கைநெறியாகும். குறிப்பாக தமிழர்களுக்கு அது இன்றியமையாததொன்றே. ஆகையால் இலங்கை வாழ் தமிழர்களை மையப்படுத்தி அவர்களின் திருமணத்தேடலை எல்லாவிதத்திலும் பூர்த்தி செய்து வருகிறது அருந்ததி என்றால் அதற்கு மிகையாகாது.

ஏனைய திருமணசேவைகளிலிருந்து சற்று மாறுபட்ட வண்ணமாக திருமணத்திற்காக வாழ்க்கைத் துணை தேடலை இலகுபடுத்துவதோடு நின்றுவிடாமல் திருமணமொன்று இனிதே நிறைவுபெற தேவையான அனைத்து திருமண சேவைகளையும் வாடிக்கையாளருக்கு வழங்கிவருகின்றது.

இணையவழியிலான வரன் தேடல் சேவையுடன், திருமணக்கண்காட்சி, மணப்பெண் அலங்கார கண்காட்சி என பன்முகப்பட்ட நிகழ்வுகளை நடைமுறைப்படுத்திவருகிறது.அப்படி மேற்கொள்ளப்பட்டு வரும் அருந்ததியின் பிரபலமான நிகழ்வுகளில் ஒன்று தான் **'மாற்று மோதிரம் திருமணக் கண்காட்சி'**. ஒவ்வொருவருடமும் வெகுவிமர்சையாக நடைபெறும் இந்நிகழ்வு இவ்வருடமும் பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளது. அனைவரும் ஆவலோடு காத்திருந்த அருந்ததியின் 'மாற்று மோதிரம்' மணப்பெண் அலங்கார காட்சி மற்றும் ஏனைய பல சிறப்பு நிகழ்வுகளோடு நடைபெறவுள்ளது. இன,மத,மொழி பேதமின்றி நாடுபூராகவுமுள்ள 50 இற்கும் மேற்பட்ட நிபுணத்துவம் வாய்ந்த அழகுக்கலை நிபுணர்கள் இந் நிகழ்வில் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வு தொடர்ந்தும் வெற்றிகரமாக நடைபெறும் என்பதற்கு சான்று அருந்ததியின் மேல் நம்பிக்கை வைத்து பங்களிப்பு செய்த திருமண சேவை வழங்குனர்கள், அழகுக்கலை நிபுணர்கள் ,வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தான். அதிலும் குறிப்பாக இந் நிகழ்வின் பிரதான அனுசரனையாளர்களாக Sri Vijayas ஆடையகம் மற்றும் Joy Glorious நகையகமும் சாரி ப்ளவுஸ் மற்றும் ஆரி வேலைப்பாடுகளுக்காக The Beads அலங்கார வேலைப்பாடுகளுக்காக Shahana Flower மற்றும் புகைப்பட ஒழுங்கமைப்புகளுக்கு 3ADS Photographyயும் இந் நிகழ்விற்கு உத்தியோகப்பூர்வ அனுசரனையாளர்களாக கரம் கோர்த்துள்ளனர்.

**இருமணம் இணையும் திருமணத் தேடலை இலகுவாக்கும் அருந்ததி...!**





















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.01.2022 இல் வெளியிடப்பெற்றது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 239

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**613.அரசியல் கட்சி தரப்பினரிடையே இந்த வார்த்தை ஜாலங்களில் என்ன பொதிந்து கிடக்கிறது?அல்லது அவை என்ன உள்நோக்கங்கள் கொண்டவை?**

சமர்ப்பணத்தின் முழு வடிவத்தையும் பரிசீலிக்காது அவை பற்றி அபிப்பிராயம் சொல்வது கடினம். பங்கு பற்றும் தலைவர்களில் மனோகணேசன், ரவூப் ஹக்கீம் தவிர மற்றோரில் அநேகர் தமிழர் தகவல்



நடுவம் தயார் செய்து கையளித்த சமர்ப்பணத்திற்கு கருத்துக்கள் தந்தவர்கள். அதன் தீர்மானங்களுக்கும் எதிர்ப்பு தராதவர்கள்.

அந்தச் சமர்ப்பணம் கட்சி அரசியலை மையப்படுத்தாது, தமிழ் மக்களை மையப்படுத்தியது. இங்கே கூட்டமைப்பினரிடையே பலப்பரீட்சை. ஆதரவு தளங்களைக் கட்டமைக்கிறார்கள். 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று கேட்கவேண்டும் என்பதில் அதன் நோக்கத்தின் தன்மைகள் விடப்பட்டோ குறைக்கப்பட்டோ செய்யப்படாது என்ற கருத்துத் தொனி உண்டு. தமிழரசு கட்சியினர் தீர்வு என்ற தமிழ் மக்களின் எதிர்காலத்தை தங்களுடைய கைகளிலேயே பலம் வாய்ந்த நிலையிலும், சர்வதேசம் இலகுவாகப் பந்தை நடத்தி கொள்ள வேண்டிய வழிகளிலும் வைத்திருக்க விரும்புகிறார்கள் என்பது தெளிவு.

இனப்பிரச்சினைக்கு மூல காரணமே தமிழ் மக்கள் வடக்குக் கிழக்கை தங்களது பெரும்பான்மை பிரதேசங்களாக கருதி, அதற்குள் தாங்கள் அதிகாரம் கொண்டிருக்கக் கோரியதுதான். சிங்களப் பெரும்பான்மை இலங்கை முழுவதும் ஒரு நாடு, இங்கு தனியான பெரும்பான்மை பகுதிகள் என்பதை ஏற்க முடியாது என்று கங்கணாங் கட்டி நின்றது. ஆக அப்படியான கோரிக்கை எது விதத்தில் வந்தாலும் அது பிரிவினை என்று சிங்களப் பெரும்பான்மை போராடியது. வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் பிரதேசம் என்பதை விட்டுக் கொடுத்து, சிங்கள மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் இலங்கை முழுவதும் ஒரு நாடு என ஏற்றுக் கொண்டு விட்டால் பிரச்சினைகளைத் தீர்ப்பதும், சில மேலதிக அதிகாரங்களை பெற்றுக் கொள்ளவும் வசதி என்ற எண்ணப்பாங்கு தமிழரசு தரப்புக்கு இருக்கலாம்.

நல்லாட்சி காலத்தில் சுமந்திரன் முக்கிய பங்கு வகித்து வரையப்பட்ட நகல் அரசமைப்பு யாப்பில் வட, கிழக்கு பகுதிகள் இணைந்ததாகவோ அன்றில் தமிழ், முஸ்லீம் மக்களின் பெரும்பான்மை பிரதேசமாகவோ பார்க்கப்படவில்லை. மற்ற மாகாணங்களில் ஒன்று போல வடக்கும் கிழக்கும் சேர்ந்து எல்லாவற்றிற்கும் கூடிய அதிகாரப்பரவல் என்ற ரீதியில் பார்க்கப்பட்டது. வலிந்து வலிந்து சிங்கள பெரும்பான்மையும் சுமந்திரனும் கூட, பிரிக்கப்படாத, பிரிக்கக் கூடாத, பிரிக்கப்பட முடியாத ஒரு நாட்டுக்குள்தான் தீர்வு என்றார்கள். இதனைப் பெற்றுக் கொள்ள செல்வம் தரப்பை ஓரம்கட்டி, இந்தியாவினதும் அமெரிக்காவினதும் அழுத்தங்களை சமர்ப்பணத்தில் கேட்கலாம். அது வசதியாக இருப்பதால் பெரும்பான்மை இணங்கிக் கொள்ள சாத்தியங்கள் உண்டு என்பதால் தமிழ் மக்களின் பெரும்பான்மை கட்சி ஏற்பதால் காய்கள் அந்த விதத்தில் புதிய அரசமைப்புக்கு நகர்த்தப்படலாம்.



அவை நடந்தால், அடுத்த தேர்தலில் ஒரு நிரந்தரமான தீர்வை மக்களது சுபீட்சத்துக்காக எடுத்து விட்டோம், அதை ஆதரியுங்கள் அல்லது இப்படியே பிரச்சினைகளோடு வாழப் போகிறீர்களா என்று கேட்கலாம். தேர்தல் அரசியலுக்கு கட்சி களை ஓரம் கட்டி, ஆளுமை பெற்று விடு வது உள்நோக்கத்தின் வெளிப்படை. விழுந்தாலும், மீசையில் மண் பட வில்லை, தமிழினத்துக்காக எழுந்து விட்டோம் என்ற கூக்குரலாகவும் இருக்கலாம்.



**614.தமிழ் தலைவர்கள் தற்சமயம் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத் தக் கோருவதும் “ஒற்றயாட்சி எனும் சொல்லோ அல்லது சமஷ்டி என்ற சொல்லோ இல்லாமல்” என்ற அணுகுமுறைகள் இனப்படுகொலை என நிறுவப்படுவதை பாதிக்குமா?**

இனப்படுகொலை,சட்டத்தின் அடிப்படையில் சர்வதேசத்தினால் பாரிய குற்றமாக கருதப்பட்டாலும் அதனை நிரூபித்து, அதனூடாக பரிகார நீதியை அடைவது அரசியலால் சூழப்பட்டது. அதே சமயம்



இவை தமிழ்மக்கள் பேசுவது ஒன்றாகவும், நடப்பது வேறு விதமாகவும் அமைந்து, நடப்புகள் இப்படியாக இருந்தால், நடந்தவற்றை எப்படி இனப்படுகொலைகளாக பார்க்க முடியும் என்ற பொது எண்ணப்பாடுகளும் தோன்றும்.

ஒரு புறம் அல்லது ஒரு பகுதி, அதிகாரங்க ளால் தந்தால் சேர்ந்துவாழலாம்என்கிறது. இன்னொரு பகுதியோ சேர்ந்து வாழ்தல் இயலாது, இனப்படுகொலை நடந்ததால் பிரித்தே விடக் கேட்கிறது. பிரிவினைகளிலும் பார்க்க ஒற்றுமைகளைத்தான் சர்வதேசம் ஊக்குவிக்கும். அரசியல் தீர்வுக்காக அனுசரனை தரும் தரப்புகள் - வல்லரசுகள் - இனப்படுகொலை நடந்தது என்ற அரசியலை முன்னெடுக்கச் சாத்தியமில்லை. மேலாக இனப்படு கொலைக் குத் துணைபுரிந்தன, அதற்கு ஊக்கமும் கொடுத்தன என அமெரிக்கா,பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளை எல்லாம் தமிழ் மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளார்கள். ஆதலால் அவர்கள் ஏன் தங்களை நியாயப் படுத்த – அல்லது குற்றவாளிக் கூண்டுகளுக்கு வர – இனப் படு கொலை என்ற விசாரணையை முன்னெடுக்க அனுசரணை தர வேண்டும்? இந்த யதார்த்தங்களில் போர் குற்றங்கள், மனித குலத்திற்கெதிரான – மனிதாபிமானத்திற்கு எதிரான – குற்றங்கள் ஆக்கிரமிப்பு குற்றங்கள் என்பவற்றையே – ஒரு முறையான கட்டமைப்பை அமைத்து, மனித உரிமை மன்றிலோ அன்றில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலோ முன்னெடுத்து செல்லவேண்டும்? இவை இன்றைய அரசியல்வாதிகள் கைகளில் விடப்படுவது எவ்வித நன்மைகளும் தரப் போவதில்லை. இந்த விசாரணைகளிலிருந்து சர்வதேசக் குற்றங்கள் சிலவற்றை நிரூபித்து, அவற்றின் மூலம் பயன்பெற வேண்டுமானால், தமிழ் மக்கள் சர்வதேச சட்டத்தரணிகள், ஆய்வாளர்கள் கொண்ட கட் டமைப்பை உருவாக்கி அதன் மூலம் இவற்றை முன்னெடுக்க வேண்டும்.

(வளரும்)



காலைக்கதிர்
Kalaikkathir

தமிழ் பேசும் தரப்புகளின் ஒருமித்த நிலைப்பாட்டை விவரிக்கும்

# புதிய ஆவண நகல் நேற்றுத் தயாரானது!

## தலைவர்களின் முடிவுக்குக் காத்திருப்பு

கொழும்பு, ஜனவரி 02

வடக்கு – கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய தமிழ் பேசும் தரப்புக்களின் ஒருமித்த நிலைப்பாட்டை – பொதுவான அபிலாஷைகளை – பிரதி பலிக்கும் பொது ஆவணத்தைத் தயாரிக்கும் முயற்சியில் புதிய நகல் ஒன்று நேற்றைய கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்த் தரப்புக் கட்சித் தலைவர்களின் பரிசீலனைக்கு அது வழங்கப்பட்ட பின்னர் தீர்மானம் எடுக்கப்படும்.

நேற்றுத் தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் இல்லத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நண்பகல் 11.30 மணி முதல் 1.30 மணி வரை புதிய நகல் ஆவணம் தயாரிக்கும் முயற்சியில் தலைவர்கள் ஈடுபட்டனர்.

இந்த முயற்சியில் எம்.ஏ.சுமந்திரன், முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் மற்றும் நிஸாம் காரியப்பர், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ரெலோவின் பேச்சாளரும் இந்த முயற்சியின் இணைப் பாளருமான சுரேந்திரன் குருசாமி ஆகியோர் பங்குபற்றினர். புதிய ஆவண நகல் தயாரிப்புக்காக மனோ கணேசன் அனுப்பி வைத்த குறிப்பும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த ஆவணத்தில் -

✦ 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கு அப்பாலும் செல்வோம் என 1987 முதல் இலங்கை, இந்தியத் தலைவர்கள் வழங்கிய உறுதிமொழிகள் நினைவூட்டப்பட்டுள்ளன.

✦ 13ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டு, பின் கைவாங்கப்பட்ட, நடைமுறைப்படுத்தப்படாத அதிகாரப் பகிர்வு விடயங்களை நடைமுறைப்படுத்துவது இந்திய, இலங்கை அரசுகளின் கடப்பாடு என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

✦ சமஷ்டி அடிப்படையிலான தீர்வே இறுதி இலக்காக அமைய வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுமார் மூன்று பக்கங்களைக் கொண்ட இந்த நகல் ஆவணத்தின் பிரதிகள் அனைத்துத் தமிழர் தரப்புக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அவர்களின் பிரதிபலிப்பை கவனத்தில் எடுத்து ஆவணம் இறுதி செய்யப்படும் எனத் தெரிகின்றது.

நேற்றைய கூட்டத்துக்கு மனோ கணேசன் வராத நிலையில் இந்த ஆவணம் தொடர்பில் அவரின் அவதானிப்பு முக்கியமாக எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டது.

ஆவணத்தின் பிரதியைத் தம்முடன் எடுத்துச் சென்ற ரவூப் ஹக்கீம் எம்.பி., தமது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் விரிவாக உரையாடிய பின்னர் தமது பக்கக் கருத்துக்களைத் தெரிவிப்பார் எனவும் கூறப்பட்டது. (உ)

# யாழ்.சிறையிலுள்ள இந்திய மீனவர்களை நேரில் சந்தித்தார் கடற்றொழில் அமைச்சர்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

எல்லை தாண்டிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று சிறைச் சாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் சிறைச் சாலைக்கு வந்த அமைச்சர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடினார்.

அவருடைய விஜயத்தின் போது யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகளும் இணைந்திருந்தனர்.

இதன்போது புதுவருடத்தை முன்னிட்டு இந்திய மீனவர்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அமைச்சரால் வழங்கிவைக்கப்பட்டன.

# வட., கிழக்கு இணைந்தால் மீண்டும் இரத்த ஆறு ஓடும்

## இப்படிச் சொல்கின்றார் தினேஷ்



வடக்கு, கிழக்கு மீள இணைந்தால் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தைச் சுட்டிக்காட்டி தமிழ்க் கட்சிகள், இந்தியப் பிரதமருக்கு ஆவணம் அனுப்புவதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒருபோதும் மீண்டும் இணைக்க முடியாது. இதற்கு முஸ்லிம் மக்கள் அனுமதி வழங்கமாட்டார்கள்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகமோ அல்லது முஸ்லிம்களின் தாயகமோ அல்ல. இரு மாகாணங்களும் இலங்கை எனும் நாட்டுக்குள்ளேயே அமைந்துள்ளன. எனவே, மாகாணங்களைப் பிரித்து எந்த இனத்தவர்களும் சொந்தம் கொண்டாட முடியாது. அனைவரும் ஒரே நாட்டுப் பிள்ளைகள். சகலரும் இலங்கையர்கள் என்ற நாமத்துடன் இங்கு வாழ வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அன்று இணைந்திருந்தபடியால்தான் இனக் கலவரம் வெடிக்க ஆரம்பித்தது. வன்முறைகள் தாண்டவமாடத் தொடங்கின.

இந்த இரு மாகாணங்களையும் முன்வைத்துத்தான் 'தமிழீழம்' என்ற கனவுடன் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஏந்திப் போராடினர். இதனால் நாடெங்கும் இரத்த ஆறு ஓடியது. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டார்கள்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இந்தத் துன்பியல் நிகழ்வுகளைத் தமிழ்க் கட்சிகள் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும் - என்றார்.

# எனது நம்பிக்கையைப் பெறாதவர் பிரதி முதல்வராக இருக்க முடியாது

## யாழ் மேயர் மணிவண்ணன் கூறுகின்றார்




(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜன 02

பிரதி முதல்வர் என்பவர் எனது நம்பிக்கையை பெற்றவராக இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையை கேள்விக்குட்படுத்துபவராக இருக்க முடியாதென யாழ் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், யாழ் மாநகர சபை முன்பாக அண்மையில் சபை உறுப்பினர்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பிய நிலையிலேயே யாழ் மாநகர முதல்வர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொய்யை கூறி போராட்டங்களை மேற்கொள்வது உண்மையில் கவலைக்குரியது. பிரதி முதல்வர் பற்றி நான் எதுவும் கூறவில்லை.

அண்மையில் நடந்த சபை அமர்வின்போது நான் ஒரு சில மணி நேரம் பங்குபற்றி விட்டு, ஆரியகுள புனரமைப்பு நிகழ்வுக்கான அழைப்பிதழ்களை வழங்குவதற்காக வெளியேறி விட்டேன். அந்த நேரத்தில் பிரதி முதல்வரை சபைக்குத்தலைமை தாங்குமாறு கூறிவிட்டே சென்றேன்.

நிகழ்ச்சி நிரலின் படி சபையை நடத்துங்கள், நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயங்களை மேற்கொள்ள வேண்டாம் என்றே கூறியிருந்தேன். துரதிஷ்டவசமாக நான் சென்ற பின்னர் என்னுடைய அனுமதியின்றி நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயங்களை கையாண்டார்.

மாநகர சட்ட ஏற்பாட்டின்படி நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயங்களை சபையில் பேச முடியாது. திடீரென ஒரு விடயத்தைப் பேச வேண்டுமாக இருந்தால் அதனை மாநகர செயலாளர் மற்றும் முதல்வரின் அனுமதி பெற்றே செய்ய வேண்டும். ஆனால் அந்த நடைமுறைகள் எதுவும் பின்பற்றப் படவில்லை.

ஆனால் நான் சம்பந்தப்படாத விடயங்களில் என்னுடைய கையொப்பத்தை இட முடியாதென தெரிவித்தேன். இதனை நான் கூறியதால் எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆனால் அதே விடயத்தை இன்று சபையில் பேசுங்கள், நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது என்று உறுப்பினர்களிடம் நான் தெரிவித்தேன். ஆனால் அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டு சென்றுவிட்டனர்.

நான், மாநகர ஆணையாளர் மற்றும் எமது கட்சியின் பெரும் பான்மையான உறுப்பினர்கள் இல்லாத சமயத்தை இலாவகமாகப் பயன்படுத்தி முன்னர் எடுத்த தீர்மானங்களை கூட ரத்து செய்வதற்கு முயற்சித்திருக்கிறார்கள். ஆகவே இவ்வாறான சிறு பிள்ளைத்தனமான செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.- என்றார்.

பிரதி முதல்வர் என்பவர் எனது நம்பிக்கையை பெற்றவராக இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையை கேள்விக்குட்படுத்துவதாக இருக்க முடியாது. - என்றார்.

# அடுத்த மூன்று வாரங்களும் மிகவும் அவதானமிக்கவை!

## வைத்திய நிபுணர் சமித்த கினிகே எச்சரிக்கை




அடுத்து வரும் மூன்று வாரங்களும் அவதானம்மிக்க வாரங்கள் என்பதால் பொது மக்கள் பொதுச் சுகாதார விதிமுறைகளை முறையாகப் பின்பற்றி நடப்பது அவசியம் என்று தொற்று நோய் பிரிவின் வைத்திய நிபுணர் சமித்த கினிகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொதுமக்கள் பொதுச் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டால் நாடு மீண்டும் அபாயகரமான நிலைமைக்குச் செல்லும்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் திருப்தியளிக்கின்றன. எனினும், இந்த நிலைமையைத் தொடர்ந்து பேணுவதற்கு, தடுப்பூசி செலுத்துவதைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

கொரோனாத் தடுப்புக்கான மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் மக்களின் ஆர்வம் குறைவாகவே உள்ளது. குறிப்பாக இளைஞர், யுவதிகள் ஆர்வம் செலுத்தவில்லை.

இது ஆபத்தான நிலை. முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்கள் மூன்று மாதங்களின் பின்னர் மூன்றாவது தடுப்பூசியைச் செலுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்று தொற்று நோய் பிரிவு கோரிக்கை விடுக்கின்றது.

தற்போதைய நிலையிலும் கூட கொரோனா வைரஸ் பரவும் அபாயம் நீங்கவில்லை. எனவே, பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்றுவது அவசியமாகும் - என்றார்.